**2016 වර්ෂය සඳහා**

**ජනලේඛන හා සංඛ්‍යාලේඛන දෙපාර්තමේන්තුවේ**

**කාර්ය සාධන වාර්තාව**

**ආචාර්ය ඒ.ජේ. සතරසිංහ**

**අධ්‍යක්ෂ ජනරාල්**

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின்

**2016** ஆம் ஆண்டுக்கான

செயலாற்றுகை அறிக்கை

கலாநிதி ஏ.ஜே. சத்தரசிங்க

பணிப்பாளர் நாயகம்

# PERFORMANCE REPORT
# OF THE
# DEPARTMENT OF CENSUS AND STATISTICS
# FOR THE YEAR 2016

**Dr. A.J. Satharasinghe**
**DIRECTOR GENERAL**

# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

தொகைமதிப்பு புள்ளிவிபர திணைக்களமானது இலங்கையின் தேசிய புள்ளிவிபர நிறுவனமாக விளங்குவதுடன் அரசாங்கத்துக்குத் தேவையான புள்ளிவிபரத் தரவுகள் சேகரித்தல், பரம்பல் மற்றும் அரச நிறுவனங்களிற்கும் ஏனைய தரவுப் பாவனையாளர்களிற்கும் புள்ளிவிபரத் தரவுகளை வழங்குதல் என்பவற்றுக்கு பிரதானமாக பொறுப்புடையதாகவும் விளங்குகின்றது. நாட்டின் பல்வேறு துறைகளின் மக்களியல், சமூகப் பொருளாதார நிலைமைகள் சம்பந்தமான தரவுகளை சேகரித்தல், வழங்குதல் ஆகியன அடங்கலாக, புள்ளிவிபர சேவைகள் தேவைப்படும் சகல அரச முகவரகங்களிற்கும் தொழில் சார் அலுவலர்களைப் பயிற்றுவித்து, பணிக்கமர்த்தலும் அதன் பணியாகும். அத்துடன் புள்ளிவிபர விடயங்கள் தொடர்பில் உதவி தேவைப்படும் முகவரகங்களிற்கு அதன் தொழிநுட்ப பிரிவுகளினுடாக புள்ளிவிபர ஆலோசனைச் சேவைகளையும் வழங்குகிறது.

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டமை காரணமாக இவ்வாண்டு விசேடமாகப் பாரட்டப்பட்டது.

2016 ஆம் ஆண்டில் ஆரம்பித்த செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு எதிர்பார்ப்பதுடன் 2015 இன் குறித்த இலக்குகளை அடைய, திணைக்கள அலுவலர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய, அயரா உழைப்புடனான சேவையையும் மிகவும் பாராட்டுகிறேன். திணைக்களத்தின் இலக்கினை நிறைவேற்ற தங்கள் ஒத்துழைப்பை வழங்கிய அரச, தனியார் நிறவனங்கள், ஏனைய அமைப்புக்கள் மற்றும் பொது மக்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.




டாக்டர்.ஏ.ஜே.சத்தரசிங்க

பணிப்பாளர் நாயகம்

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்,

"சங்கியான மந்திரிய"

இல. 306/71, பொல்துவ வீதி, பத்தரமுல்ல

தொலைபேசி : +94 11 2147001

பக்ஸ் : +94 11 2147011

மின் அஞ்சல் : dgcensus@statistics.gov.lk

இணையத்தளம் : www.statistics.gov.lk

# உள்ளடக்கம்

பக்கம்


**1. அறிமுகம்** ............ 37

**2. திணைக்களத்தின் செயற்பாடுகள்** ............ 37

**2.1 திணைக்களத்தால் நடாத்தப்படும் தொகைமதிப்புகளும் அளவீடுகளும்** ............ 37

2.1.1 அரச, அரச சார்புத்துறையில் உள்ளோரின் தொகைமதிப்பு - 2016............ 37

2.1.2 பொருளாதாரத் தொகைமதிப்பு - 2013/14............ 38

2.1.3 மோதல் காரணமாக இறந்த/ காயமடைந்தோர் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதம் சம்பந்தமான தொகைமதிப்பு - 2013............ 39

2.1.4 கணனி அறிவு சம்பந்தமான அளவீடு............ 39

2.1.5 மக்களியல், சுகாதார அளவீடு - 2016............ 39

2.1.6 சிறுவர் செயற்பாட்டு அளவீடு -2016............ 40

2.1.7 குடித்தன வருமான செலவின அளவீடு 2016 ............ 40

2.1.8 இலங்கைத் தொழிற்பல அளவீடு - 2016............ 40

2.1.9 நெல் அறுவடையின் மதிப்பீட்டு அளவீடு............ 41

2.1.10 தேயிலை, இறப்பர்,தெங்கு உற்பத்திச் செலவின அளவீடு............ 41

2.1.11 விவசாய உற்பத்தி சம்பந்தமான அளவீடு 2016/17............ 41

2.1.12 கைத்தொழில் உற்பத்தி சம்பந்தமான காலாண்டு அளவீடு - 2015............ 42

2.1.13 உருளைக் கிழங்கு உற்பத்தி மதிப்பீடு அளவீடு - 2016............ 42

2.1.14 பெரிய வெங்காய உற்பத்தி அளவீடு - 2016............ 42

2.1.15 வருடாந்த நிர்மாணக் கைத்தொழில் சம்பந்தமான அளவீடு - 2015............ 42

2.1.16 வருடாந்தக் கைத்தொழில் அளவீடு - 2015............ 43

2.1.17 வருடாந்த வர்த்தக, சேவைகள் அளவீடு – 2016............ 43

2.1.18 விலைகளைப் பரீட்சிக்கும் அளவீடு............ 43

**2.2 இலங்கையின் சமூகப், பொருளாதார நிலைமைகள் சம்பந்தமான தரவு சேகரித்தல், கணித்தல் தொடர்பில் திணைக்களத்தால் நடாத்தப்படும் ஏனைய புள்ளிவிபர நடவடிக்கைகள்**............ 43

2.2.1 நெற் புள்ளிவிபரம்............ 43

2.2.2 மக்களியல் புள்ளிவிபரங்கள்............ 43

2.2.3 மேட்டுநிலப் பயிர்கள் மற்றும் கால்நடைகளின் புள்ளிவிபரங்கள்............ 44

2.2.4 கால்நடைப் புள்ளிவிபரம் சேகரித்தல் - 2016............ 44

2.2.5 இறைச்சிக்காக கொல்லப்படும் விலங்குகளின் புள்ளிவிபரங்கள்............ 44

2.2.6 உணவு ஐந்தொகைத்தாள்............ 45

2.2.7 இலங்கையின் தேசிய கணக்குகள்............ 45

2.2.8 தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் - (அடிப்படை 2013=100)............ 47

2.2.9 சில்லறை மற்றும் உற்பத்தியாளர் விலைகள்............ 48

2.2.10 உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் (PPI) (அடிப்படை 2013 Q4=100)............ 48

2.2.11 சர்வதேச ஒப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம்............ 49

2.2.12 உள்ளூராட்சிப் புள்ளிவிபரம்....49
2.2.13 ஆராய்ச்சி மற்றும் விசேட கற்கை நடவடிக்கைகள்....49
2.2.14 வியாபார சம்பந்தமான புள்ளிவிபரப் பதிவேடு.... 51
2.2.15 கட்டடப் புள்ளிவிபரங்கள்.... 51
2.2.16 கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP).... 52
2.2.17 பயிற்சி நடவடிக்கைகள்....52
2.2.18 தகவற் தொடர்பாடற் தொழில்நுட்ப பிரிவு.... 53
2.2.19 வெளியீட்டு பிரிவு.... 54
2.2.20 அச்சிடல் பிரிவு.... 55
2.2.21 வரைபட பிரிவு.... 56
2.2.22 தரவுப் வெ ளியிடல் பிரிவு.... 57
2.2.23 நூலக பிரிவு.... 58
2.2.24 வெளிக்கள முகாமை பிரிவு.... 59

**2.3 சிலஅமைச்சுகள், திணைக்களங்களிலுள்ள திணைக்கள கிளை அலுவலகங்களில் நடாத்தப்பட்ட தொகைமதிப்புகளும் அளவீடுகளும்**.... 60
2.3.1 வருடாந்த வேலைவாய்ப்பு அளவீடு.... 60
2.3.2 சராசரி உழைப்புகள், வேலையில் ஈடுபட்ட மணித்தியாலங்கள் சம்பந்தமான அளவீடு.... 60
2.3.3 ஆகக் குறைந்த கூலி சுட்டெண் தயாரித்தல்.... 60
2.3.4 தொழிற் புள்ளிவிபரங்களை வெளியிடுதல்....60
2.3.5 கல்விப் புள்ளிவிபரங்கள்....61
2.3.6 வைத்தியப் புள்ளிவிபரங்கள்....61
2.3.7 வாழ்நிலைப் புள்ளிவிபரங்கள்....62
2.3.8 சுங்கப்புள்ளிவிபரங்கள்....62
2.3.9 கடற்றொழில் புள்ளிவிபரங்கள்.... 63

**3. நிர்வாகம்**.... 63
**3.1 பிரிவுகள், கிளை அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள்**....63
3.1.1 பிரிவுகளும் அலகுகளும்....63
3.1.2 அமைச்சுக்கள், திணைக்களங்களில் உள்ள கிளை அலுவலகங்கள்.... 64
3.1.3 மாவட்ட அலுவலகங்கள்.... 64
3.1.4 மாகாணசபைகளில் உள்ள புள்ளிவிபர ஆளணியினர்.... 64
**3.2 ஆளணியினர்**.... 64
**3.3 பங்குபற்றிய மகாநாடுகள், கருத்தமர்வுகள், செயலமர்வுகள் 2016**.... 67
**3.4 பதவியுயர்வுகள், புதிய நியமனங்கள், விடுவிப்புகள், பதவி விலகல்கள், பதவி வெறிதாக்கல்கள் மற்றும் இளைப்பாறல்கள்**.... 71
**3.5 உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள்**.... 73
**4. நிதி அறிக்கை 2016**.... 74

## வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2016

### 1. அறிமுகம்

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது நாட்டின் அபிவிருத்திக்கு கொள்கைகளை உருவாக்கவும், திட்டமிடவும் நோக்குடைய புள்ளிவிபரங்களுக்குப் பொறுப்பான மத்திய அரசின் முகவராகும். பரந்தளவில் தரவுகள் தேவைப்படும் மாணவர்கள் தொடக்கம் சர்வதேச பயன்படுத்துநர்களுக்கு திணைக்களம் தரவுகளை வழங்குகிறது. திணைக்களத்தால் நடத்தப்படும் தொகைமதிப்புகள்,அளவீடுகளின் அடிப்படையில் விவசாயம், வர்த்தகம், கைத்தொழில், சனத்தொகை, தேசிய வருமானம் மற்றும் ஏனைய மக்களியல் தகவல்களை உரிய காலத்தில் மேற்படி தேவைப்பாடுகளின் நிறைவேற்றுதலை திணைக்களம் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறது.

### தொலை நோக்கு

நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை எய்தும் பொருட்டு, புள்ளிவிபரத் தரவுகளைத் துரிதமாக வழங்குவதில் பிராந்தியத்தின் முன்னோடியாகத் திகழ்தல்.

### செயல் நோக்கு

உலகச் சூழலில் வளமிக்க நாடொன்றை உருவாக்கும் பொருட்டு, தந்திரோபாயத் தலைமையின் கீழ் அர்ப்பணம்மிகு அலுவலர்களின் சேவைப் பயன்பாடு, மற்றும் புதிய தொழில்நுட்பம் என்பவற்றின் மூலம் வினைத்திறன் மிக்க முறையில் புள்ளிவிபரங்களை சரியாகவும், துரிதமாகவும் வழங்கி, நாட்டின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பை வழங்குதலே இதன் செயல்நோக்காகும்.

### 2. திணைக்களத்தின் செயற்பாடுகள்

இத்திணைக்களத்தின் செயற்பாடுகள் பின்வரும் மூன்று பரந்த பிரிவுகளைக் கொண்டிருக்கின்றன.

2.1 திணைக்களத்தால் நடாத்தப்படும் தொகைமதிப்புகளும் அளவீடுகளும்.

2.2 நாட்டின் சமூகப் பொருளாதார நிலைமைகள் சம்பந்தமான தரவு சேகரித்தல், கணித்தல் தொடர்பாக திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய புள்ளிவிபர வேலைகள்.

2.3 சில அமைச்சுக்களிலும் திணைக்களங்களிலும் அமைந்துள்ள, திணைக்களத்தின் கிளை அலுவலகங்களால் நடாத்தப்படும் தொகைமதிப்புகளும் அளவீடுகளும்.

### 2.1 திணைக்களத்தால் நடாத்தப்படும் தொகைமதிப்புகளும் அளவீடுகளும்

### 2.1.1 அரச, அரச சார்புத்துறையில் உள்ளோரின் தொகைமதிப்பு - 2016

அரச (மத்திய அரச, மாகாண அரச) மற்றும் அரச சார்புத்துறை, அவ்வலுவலர்களின் மக்களியல், சமூக, பொருளாதாரத் தகவல்கள் சேகரிக்கப்பட்டு நாட்டின் கொள்கை ஆக்கம் மற்றும் தொழிற்பல திட்டமிடலின் பொருட்டு இத்தொகைமதிப்பு நடத்தப்படுகிறது. இத்தொகைமதிப்பிற்கான அறிவுறுத்தற் கைநூல் தயாரித்தல், குறியீட்டுப் பட்டியல் தயாரித்தல், மத்திய அரசு/மாகாணஅரசு/அரச சார்புப் பிரிவை உள்ளடக்கியவாறு 10 நிறுவனங்களை தெரிவு செய்து தொகைமதிப்பின் முன் பரீட்சித்தல் மேற்கொள்ளல், அதன் பிரகாரம் வினாக்கொத்தில் திருத்தஞ் செய்தல், சகல அரச, அரச சார்பு நிறுவனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தொகைமதிப்பு இணைப்பு உத்தியோகத்தர்கள், உதவி இணைப்பு உத்தியோகத்தர்களை நியமித்து அவர்களுக்குத் தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டம் நடத்துதல், அவர்களின் உதவியுடன் தொகைமதிப்புச் சட்டகம் தயாரித்தல் போன்ற தொகைமதிப்பின் முன் திட்டமிடல் வேலைகள் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன. திணைக்களத்தின் தலைமை

அலுவலகச் சுற்றாடலிலும் மாவட்ட செயலக சுற்றாடலிலும் மாகாண சபைச் சூழலிலும் கூடிய எண்ணிக்கையினர் பணியாற்றும் நிறுவனங்களில் 100 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தி இத்தொகைமதிப்பு பற்றி தெளிவுபடுத்தப்பட்ட பின்னர் 2016 நவம்பர் 17 ஆம் திகதி அரச, அரச சார்புத் துறையின் சகல நிறுவனங்களையும் உள்ளடக்கி நாடளாவிய ரீதியில் தொகைமதிப்பு மேற்கொள்ளப்பட்டது. இத்தொகைமதிப்பில் வேலைபுரிவோர் சம்பந்தமான தகவல் சேகரித்தலுக்கு சமாந்தரமாக ஒவ்வொரு அரச, அரச சார்புத் துறை நிறுவனத்தினதும் காணி கட்டடம், வாகனம், உபகரணம் போன்ற நிறுவனச் சொத்துகள் சம்பந்தமான சாராம்சத் தகவல்களை நிரற்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டது.

இத்தொகைமதிப்பிற்கேற்ப பிரதான அமைச்சுகள், மாகாண பிரதம செயலகங்கள், மாகாண அமைச்சுகள், மாவட்ட செயலகங்கள் மற்றும் அமைச்சு ஒன்றின் கீழ் வராத நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட **R4** சாராம்ச அறிக்கைகளை அலுவலகத்தில் சேகரித்தல் இவ்வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன் இவ்வருடத்தில் 60% மான சாராம்ச அறிக்கைகள் சேகரிக்கப்பட்டன.

தொகைமதிப்புத் தரவுப் பகுப்பாய்வு, ஆரம்ப, இறுதி அறிக்கை வெளியிடல் என்பன 2016 இனுள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் 2016 இற்கான செயற்திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பின் தொகைமதிப்பு முறையில் மாற்றம் ஏற்பட்டதால் முன் தொகைமதிப்பு நடவடிக்கைகள், தொகைமதிப்பு நடவடிக்கைகளுக்கு கூடிய காலம் தேவைப்பட்டமையால் அதனை 2016 இனுள் பூர்த்தி செய்ய இயலவில்லை.

### 2.1.2 பொருளாதாரத் தொகைமதிப்பு - 2013/14

#### I. விவசாயத் துறையில் தரவு சேகரித்தல்

இலங்கையின் பொருளாதாரத் துறையிலுள்ள அமைப்பு ரீதியான மாற்றங்களை இனங்காணும் பொருட்டு விவசாயம், கைத்தொழில், வர்த்தக, சேவைகள் துறைகளை உள்ளடக்கும் வகையில் நடத்தப்பட்டது.

விவசாயப் பிரிவின் தரவு சேகரித்தல் இரு கட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது. முதலாவதாக விவசாயத் தொகைமதிப்புக்கு ஏற்ப 20 ஏக்கருக்கு மேற்பட்ட தோட்டங்களை நிரற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்காக அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது. இரண்டாவது கட்டம் விவசாயத்திற்குரிய சகல கூறுகளினதும் விரிவான தகவல்கள் சேகரிக்கப்பட்டதுடன் அத்தகவல்களிடையே பெரிய கமக்காணி, சிறிய கமக்காணி மற்றும் தோட்டங்களை உள்ளடக்கியவாறு கமச்செய்கையாளர், கமச்செய்கையாளர் குடித்தனம், காணிப் பயன்பாடு மற்றும் உரிமை, ஒவ்வொரு பயிர்களின் கீழும் பயிரிடப்படும் நிலப்பரப்பு, ஆழ்கடல்/நன்னீர்/ஆற்று நீர் மீன் பிடிப்பு போன்ற விடயங்களுக்குரிய தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

இத்தொகைமதிப்பில் சேகரிக்கப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட சில அறிக்கைகள் வெளியிடப்பட்டன. அதன் பிரகாரம் தோட்டங்கள் பற்றிய சாராம்ச அறிக்கை, களத்தில் தரவு சேகரிக்கப்பட்ட தருணத்தில் தயாரிக்கப்பட்ட சாராம்ச அறிக்கை என்பவற்றைக் கொண்டு சிறு கமக்காணி பற்றிய ஆரம்ப அறிக்கையும் மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட அறிக்கைகளும் தற்போது திணைக்கள இணையத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஏனைய மாவட்ட அறிக்கைகளும் இறுதி அறிக்கையும் 2017 இனுள் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

### II. விவசாயமற்ற துறையில் தரவு சேகரித்தல்

விவசாயமற்ற துறையானது இரண்டு நிலைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது. பட்டியல் படுத்தும் நிலை மற்றும் விபரமான தரவு சேகரிக்கும் நிலை. விபரமான தரவு சேகரிப்பானது சகல பாரிய நிறுவனங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் மாதிரியிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைத்தொழில் பிரிவின் தரவுடன் கூடிய அறிக்கை இவ்வருடம் வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன் வர்த்தகம் மற்றும் சேவைகளுக்கான அறிக்கையின் தயாரிப்பு தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அத்துடன் முறைசாரா பிரிவிற்கான தரவுகளின் ஆய்வு இடம்பெற்று வருகிறது.

### 2.1.3 மோதல் காரணமாக இறந்த/ காயமடைந்தோர் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதம் சம்பந்தமான தொகைமதிப்பு - 2013

இத்தொகைமதிப்பானது பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினாலும் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினாலும் இணைந்து 2013 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. தொகைமதிப்புத் தரவுகளின் செம்மையைச் சரிபார்த்தல், தரவுப் பகுப்பாய்வு, இறுதி அறிக்கை வெளியிடல் என்பன 2016 இல் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்தது. தொகைமதிப்பில் சேகரிக்கப்பட்ட தரவுகளில் மோதல் காரணமாக இறந்த/காயமடைந்தோரின் தரவுகளின் செம்மை சரிபார்க்கப்பட்டு தரவுப் பகுப்பாய்வின் பின்னர் அத்தொகைமதிப்பின் இறுதி அறிக்கை தயாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.1.4. கணனி அறிவு சம்பந்தமான அளவீடு

கல்வி அமைச்சும் தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களமும் இணைந்து பாடசாலைச் சிறுவர்கள் மற்றும் ஆசிரியர்களின் கணனி அறிவைக் கணிக்கும் பொருட்டு இலங்கை அரச பாடசாலைகள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் 2014 இல் இவ்வளவீடு மேற்கொள்ளப்பட்டது. அளவீட்டுக்கான தொழில்நுட்ப உதவி இத்திணைக்களத்தால் வழங்கப்பட்டதுடன் தரவுகளைக் கணனிப்படுத்துதற்கான கணனி நிகழ்ச்சித்திட்டம் தயாரித்தல் மற்றும் தரவுகளைக் கணனிப்படுத்தும் ஏனைய நடவடிக்கைகளுக்கான தொழில்நுட்ப உதவி வழங்குதல் என்பன 2016 இல் வழங்கப்பட்டது.

### 2.1.5 மக்களியல், சுகாதார அளவீடு - 2016

திணைக்களத்தினால் CAPI (கணனி உதவியுடன் தனிப்பட்ட நேர்காணல்) முறையைப் பயன்படுத்தி நடத்தப்பட்ட முதல் அளவீடாக மக்களியல், சுகாதார அளவீடு - 2016 ஐக் கொள்ளலாம். இதற்காக சர்வதேச உதவி பெறப்பட்டதுடன் சுகாதார அமைச்சின் வேண்டுகோளின் பேரில் இவ்வளவீடு 2016 இல் நடத்தப்பட்டது. அளவீட்டிற்காக அலுவலக உபகரணங்கள் மற்றும் ரப்லற் கணனிகளைக் கொள்வனவு செய்தல், பதிலளிப்பவர், பிள்ளைகளை ஊக்குவிக்கும் பொருட்கள் மற்றும் வைத்திய உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், போக்குவரத்து வசதிகளுக்கான ஏற்பாடுகள் என்பன சுகாதார அமைச்சின் திட்டப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டன. அளவீட்டுப் படிவம் தயாரித்தல், CAPI தொழில்நுட்பத்துக்கான கணனி நிகழ்ச்சித்திட்டம் உள்ளடக்குதல், களப் பரீட்சித்தல், இரண்டாம் நிலைத் தரவுகளைத் தொகுத்தல் என்பன ICF சர்வதேச நிறுவன அறிவுறுத்தல் மற்றும் வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. அளவீட்டினது களத்தில் தரவுசேகரித்தல், தரவுகளைத் தலைமை அலுவலகத்திற்கு அனுப்புதல் என்பன பூர்த்தியடைந்ததுடன் ஆரம்ப, இறுதி அறிக்கை தயாரித்தலுக்குத் தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது தரவுகளை வெளியிடும் செயன்முறை திட்டமிடப்பட்டு வருகிறது.

### 2.1.6 சிறுவர் செயற்பாட்டு அளவீடு - 2016

சிறுவர் செயற்பாட்டு அளவீடு 5 - 17 வயதுடைய சிறுவர்களின் பொருளாதார நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் பொருட்டு நடத்தப்படுகிறது. தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் அமைச்சின் வேண்டுகோளிற்கிணங்க சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியுடன் இவ்வளவீடு நாடளாவிய ரீதியில் 25000 வீட்டுக் கூறுகளை மாதிரியாகப் பயன்படுத்தி 2016 இல் மேற்கொள்ளப்பட்டதுடன் 2016 மே மாதமளவில் அவ்வளவீட்டின் கள நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டது. சேகரிக்கப்பட்ட தரவுகளின் கணனிப்படுத்தல், பதிப்பித்தல் வேலைகள் முடிவடைந்து, இறுதித் தரவுகளின் மதிப்பீட்டு அட்டவணைகள் சர்வதேச தொழில் ஸ்தாபனத்திற்கு வழங்கப்பட்டதுடன் இறுதி அறிக்கையின் பகுப்பாய்வு நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளன.

### 2.1.7 குடித்தன வருமான, செலவின அளவீடு - 2016

குடித்தன வருமான, செலவின அளவீடு நாட்டின் வாழ்க்கைத் தர மட்டங்களை அளவிடும் பொருட்டு குடித்தன வருமானம் மற்றும் நுகர்வுச் செலவினம் சம்பந்தமான தகவல்களை வழங்கும் நோக்கில் 3 வருடங்களுக்கொருமுறை நடத்தப்படுகிறது. இவ்வளவீடு வறிய குடித்தனங்களை இனங்காணுவதற்கும் அரசாங்கத்திற்கும் ஏனைய நிறுவனங்களிற்கும் தகவல்களை வழங்குவதற்கும் வறிய குடித்தனங்களை மேம்படுத்தல் மற்றும் தேசிய தீர்மானங்கள் எடுத்தல் என்பவற்றுக்கான நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிடல் பொருட்டும் முக்கியமானதாகும்.

குடித்தன வருமான, செலவின அளவீட்டின் நான்காம் காலாண்டு வரை கள வலைகள் தற்போது பூர்த்தியடைந்துள்ளன. தரப்பட்ட கால அட்டவணைக்கேற்ப தரவுகள் கணனிப்படுத்தல் வேலைகளை மாவட்ட அலுவலகங்களில் பூர்த்தியடைந்துள்ளதுடன் தரவுகளைக் பதிப்பித்தல், திருத்தல் என்பனவும் பூர்த்தியடைந்துள்ளன.

### 2.1.8. இலங்கைத் தொழிற்பல அளவீடு- 2016

இலங்கைத் தொழிற்பல அளவீடு, இலங்கையிலுள்ள வேலையிலுள்ளோர், வேலையற்றோர் மற்றும் தொழிற்பலம் என்பனவற்றின் மட்டங்கள், போக்குகளை அளவிடும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தொழிற்பல அளவீடு, 1990 இலிருந்து தொடர்ச்சியாக நடத்தப்படுவதுடன் இதன் மூலம் வருடாந்த, காலாண்டுத் தரவுகள் வெளியிடப்படுகின்றன.

தொழிற்பல அளவீட்டின் கள நடவடிக்கைகள் நான்கு காலாண்டிற்கும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. உரிய கால அட்டவணைக்கேற்ப தரவுகள் கணனிப்படுத்தல், பதிப்பித்தல் நடவடிக்கைகள் மாவட்ட அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்டதுடன் அவற்றின் செம்மை பிரிவின் ஊடாகச் சரிபார்க்கப்பட்டது. அத்துடன் காலாண்டு அறிக்கை தயாரித்தல், வெளியிடல் மற்றும் இணையத்தில் பிரசுரித்தல் என்பன உரிய காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன.

கொரிய அரசின் நிதி உதவியின் கீழ், KOSTAT நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக tablet கணனிகளைப் (CAPI முறையின் கீழ் ) பயன்படுத்தி இலங்கைத் தொழிற்பல அளவீட்டின் கள நடவடிக்கைகளை 2017 இலிருந்து மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் திட்டமிடல், முன்னோடி அளவீட்டு நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளதுடன் கள உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை: 1 : இலங்கை தொழிற்பல அளவீடு 2016**

| சுட்டெண் | இலங்கை | ஆண் | பெண் |
|---|---|---|---|
| தொழிற்பலம் (15 வயதும் அதற்கு மேலும்) ('000) | 8,311 | 5,304 | 3,007 |
| தொழில் அற்றோர் ('000) | 363 | 154 | 209 |
| தொழிற்பலத்தில் பங்குபற்றும் சதவீதம் | 53.8 | 75.1 | 35.9 |
| பணிபுரிவோர் சதவீதம் (%) | 4.4 | 2.9 | 7.0 |

### 2.1.9. நெல் அறுவடையின் மதிப்பீட்டு அளவீடு

2015/16 பெரும்போகம், 2016 சிறுபோகத்திற்கான நெல் பயிரிடப்பட்ட நிலப்பரப்பளவு சராசரி விளைச்சல், மொத்த உற்பத்தியை மதிப்பிடல் என்பன இதனூடாக மேற்கொள்ளப்படுகிறது. 2015/16 பெரும்போகம், 2016 சிறுபோகத்தின் பொருட்டு நெல் பயிரிடப்படும் மாவட்டங்களில் நெல் பயிரிடப்படும் நீர்பாசனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏக்கர்/ஹெக்ரேயர் ஒன்றுக்குரிய சராசரி நெல் அறுவடை இவ்வளவீட்டில் மதிப்பிடப்படுகிறது.

இங்கு தேசிய ரீதியாகவும் மாவட்ட ரீதியாகவும் பயிரிடப்படும் , அறுவடை செய்யப்படும் பரப்பளவை கணிப்பிடும் பொருட்டும் நெல் விளைச்சலை மதிப்பிடும் பொருட்டும் அளவீடு மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் மஹாவலிப் பிதேசங்களில் சிறு முகாமைத்துவப் பிரிவு ரீதியாகவும் மேற்படி புள்ளிவிபரங்கள் கணிக்கப்பட்டன.

அதன் பிரகாரம், 2015/16 பெரும்போகத்தில் நெல் பயிரிடப்பட்ட பரப்பளவு, சராசரி விளைச்சல், மொத்த உற்பத்தி மதிப்பிடல் மற்றும் 2016 சிறு போகத்தில் மேற்படி மதிப்பீடுகளுக்குரிய தகவல்கள் சேகரிக்கப்பட்டன. மேற்படி அளவீட்டுக்குச் சமாந்தரமாக நெல் பயிரிடுதல் தொடர்பான ஒவ்வொரு நெல் வகைக்கேற்ப பயிரிடப்படும் பரப்பளவு, நெற்காணி பதப்படுத்தப்படும் முறை, உரப்பாவணை, பூச்சிகொல்லிப் பாவணை போன்ற தகவல்களும் சேகரிக்கப்பட்டன.

### 2.1.10. தேயிலை, இறப்பர்,தெங்கு உற்பத்திச் செலவின அளவீடு

2014/15 இற்கான தேயிலை, இறப்பர், தெங்கு ஆகிய பிரதான பயிர்களின் உற்பத்திச் செலவுகளைக் கணிப்பிடல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டது. ஒரு கிலோகிராம் தேயிலையின் உற்பத்திச் செலவினம் கணிப்பிடுவதற்கான விரிவான தகவல்கள் இலங்கைத் தேயிலைச் சபையின் தேயிலை ஆணையாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட தேயிலைத் தொழிற்சலைகளிலிருந்து பெறப்பட்டது. இறப்பர் உற்பத்திச் செலவினம், இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டின் அடிப்படையில் கணிக்கப்படுகிறது. தெங்கு உற்பத்தி செலவினம் சம்பந்தமான அளவீடு தொகைமதிப்பு புள்ளிவிபரம் திணைக்களத்தால் நடாத்தப்படுகிறது. இவ் அளவீடுகளிலிருந்து பெற்ற தகவல்களின் ஊடாக 2014/15 வருடத்துக்கான தேயிலை, இறப்பர், தெங்கு உற்பத்திச் செலவினம் கணிப்பிடப்படுகிறது.

### 2.1.11 விவசாய உற்பத்தி சம்பந்தமான அளவீடு - 2016/17

விவசாய துறையில் ஏற்பட்ட கட்டமைப்பு ரீதியிலான மாற்றம் பற்றி ஆய்வு செய்யும் நோக்கில் இவ்வருடம் புதியதொரு அளவீட்டை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதன்கீழ் விவசாயத் துறையைச் சார்ந்த வீட்டுக்

கூறுகளின் மக்களியல் தகவல்கள், நிலப்பயன்பாடு பயிர்ச்செய்கை அமைப்பு, கால்நடை வளர்ப்பு, பயிர்ச்செய்கை உற்பத்திச் செலவினம், இருப்புக்களின் தொகை என்பன சம்பந்தமான தகவல்களைச் சேகரிப்பதற்கு இவ்வளவீட்டில் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய அளவீட்டுக்கான படிவம் தயாரிக்கும் மற்றும் அளவீட்டினை மேற்கொள்ளும் முறை தொடர்பான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

### 2.1.12. கைத்தொழில் உற்பத்தி சம்பந்தமான காலாண்டு அளவீடு - 2015

உற்பத்தி நிறுவனங்களின் உற்பத்திமட்டம், மூலப்பொருள் நுகர்வு, வருவாய், தொழில் அமர்வு உற்பத்தி போன்றவற்றின் அண்மித்த விபரங்களைப் பெறும்பொருட்டு இவ்வளவீடு நடாத்தப்படுகின்றது.

2015 இன் நான்காம் காலாண்டு, 2016 இன்1ம்,2ம்,3ம் காலாண்டுக்கான கள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றுக்கான வளர்ச்சி வீதம் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய கணக்குகள் தயாரித்தலுக்கு உதவியாக அத்தகவல்கள் வழங்கப்பட்டன.

### 2.1.13. உருளைக் கிழங்கு உற்பத்தி மதிப்பீடு அளவீடு - 2016

உருளைக்கிழங்கு அறுவடை சம்பந்தமான தகவலைப் பெறும்பொருட்டு காணிப்பரப்பளவு, எதிர்பார்க்கப்பட்ட அறுவடை சம்பந்தமான தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

இவ்வளவீடு 2016 இல் நுவரெலியா மாவட்டத்தில் மூன்று கட்டங்களில் நடத்தப்பட்டதுடன் பதுளை மாவட்டத்தில் இரு கட்டங்களில் நடத்தப்பட்டது. இங்கு கள நடவடிக்கைகள் ஜனவரி / பெப்ரவரி, ஏப்ரல் / மே, ஆகஸ்ட் / செபரெம்பர் காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டதுடன் அவ்வளவீட்டுப் பெறுபேறுகளின் பிரகாரம் 2016 இல் உருளைக்கிழங்கு பயிரிடப்பட்ட பரப்பு, மாதாந்தம் எதிர்பார்க்கப்படும் உற்பத்தியை எதிர்வு கூறல் என்பன மேற்கொள்ளப்பட்டன.

### 2.1.14. பெரிய வெங்காய உற்பத்தி அளவீடு - 2016

2016 இல் இவ்வளவீடு பெரிய வெங்காயச் செய்கையாளர்களின் எண்ணிக்கை மற்றும் காணிப் பரப்பளவு என்பவற்றுக்கமைய பிரதேச செயலகப் பிரிவு ரீதியாக அனுராதபுரம், பொலன்னறுவை, மாத்தளை மாவட்டங்களிலும் அலகு முகாமைப் பிரிவு ரீதியாக மகாவலி “சற்” வலயத்திலும் நடத்தப்பட்டது.

பெரிய வெங்காயம் உற்பத்தி மதிப்பீட்டுக்கான இவ்வளவீடு சிறுபோகத்தின் போது மேற்கொள்ளப்படுவதால் அதன் கள நடவடிக்கைகள் 2016 ஆகஸ்ட்/செப்டெம்பர் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வளவீட்டுப் பெறுபேறுகளின் பிரகாரம் 2016 இல் பி.செ.பிரிவு ரீதியாகவும் மகாவலி -“எச்” வலயத்தில் அலகு முகாமைப் பிரிவு ரீதியாகவும் பெரிய வெங்காயம் பயிரிடப்படும் நிலப்பரப்பளவு , எதிர்பார்க்கப்படும் உற்பத்தி உள்ளடக்கிய இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டது.

### 2.1.15. வருடாந்த நிர்மாணக் கைத்தொழில் சம்பந்தமான அளவீடு - 2015

இவ்வளவிட்டின் ஊடாக நிர்மாணக் கைத்தொழில் அமைப்பு பற்றிய கொள்கை மற்றும் திட்டம் தயாரிக்கத் தேவையான தரவுகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. கள நடவடிக்கைகள், அட்டவணை பதிப்பித்தல், குறியீடிடல், தரவுகளை கணனிப்படுத்தல் மற்றும் இறுதி அறிக்கை தயாரித்தல் என்பன மேற்கொள்ளப்பட்டன.

### 2.1.16. வருடாந்தக் கைத்தொழில் அளவீடு - 2015

வருடாந்தக் கைத்தொழில் அளவீடு - 2015 இற்கான கள நடவடிக்கைகள், களத்திலிருந்து பெற்ற வினாக்கொத்துக்களைப் பதிப்பித்தல், குறியீடிடல், கனணிப்படுத்தல் நடவடிக்கைகள் நடைபெற்றதுடன் இறுதி அறிக்கை தயாரித்தல் நடைபெற்று வருகிறது.

வருடாந்தக் கைத்தொழில் அளவீடு - 2016 க்கான கள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு களத்திலிருந்து பெற்ற வினாக்கொத்துக்களைப் பதிப்பித்தல், குறியீடிடல், கணனிப்படுத்தல் வேலைகள் நடைபெற்று வருகிறது.

### 2.1.17. வருடாந்த வர்த்தக, சேவைகள் அளவீடு - 2016

இவ்வருடத்துக்கான வினாக்கொத்தைத் திட்டமிடுதல், அளவீடு பற்றி கள அலுவலர்களுக்குத் தெளிவூட்டும் பயிற்சித் திட்டம் நடத்துதல், கள நடவடிக்கைகள் என்பன மேற்கொள்ளப்பட்டதுடன் களத்திலிருந்து பெற்ற வினாக்கொத்துக்கள் பதிப்பித்தல், குறியீடிடல், கணனிப்படுத்தல் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 2.1.18. விலைகளைப் பரீட்சிக்கும் அளவீடு

திணைக்களத்தின் விலைகளும் கூலிகளும் பிரிவின் பிரதான பணிகளில் ஒன்று, கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை மாதாந்தம் கணிப்பிட்டு வெளியிடுதலாகும். இச்சுட்டெண் கணிக்கத் தேவையான விலைத் தகவல்களைப் பெறும்பொருட்டு விலைகளும் கூலிகளும் பிரிவின் அலுவலர்களினால் கொழும்பு மாவட்டத்தின் நகரப் பிரதேசங்களை உள்ளடக்கியவாறு விலைகளைப் பரீட்சிக்கும் அளவீடு மேற்கொள்ளப்படுகிறது. கொழம்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் கணித்தலுக்கு கொழும்பு நகரப் பிரதேசத்திலுள்ள 14 மத்திய நிலையங்களிலிருந்து தொடர்ச்சியாக பொருட்கள், சேவைகளின் விலைகள் பெறப்படுகின்றன.

இங்கு தெரிவு செய்யப்பட்ட பொருட்கள், சேவைகளின் விலைத் தகவல்கள் தொடர்ச்சியாக ஒவ்வொரு பொருளுக்கும் உரிய குறியீடுகளுக்கமைய பெற்றுக்கொள்ளப்படுகின்றன. இவ்வளவீட்டுத் தகவலின் ஊடாக கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் கணிப்பிடப்பட்டு வெளியிடப்பட்டு வருகிறது.

## 2.2. இலங்கையின் சமூகப், பொருளாதார நிலைமைகள் சம்பந்தமான தரவு சேகரித்தல், கணித்தல் தொடர்பில் திணைக்களத்தால் நடாத்தப்படும் ஏனைய புள்ளிவிபர நடவடிக்கைகள்.

### 2.2.1. நெற் புள்ளிவிபரம்

நெல் விளைச்சலை மதிப்பீடு செய்யும் அளவீட்டிலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு பெறும், சிறு போகத்திற்கான மாவட்ட மட்டத் தகவல்கள் வெளியிடுதல் என்பன மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் மகாவலிப் பிரதேசங்களில் சிறு முகாமைத்துவப் பிரிவு ரீதியாகவும் புள்ளிவிபரங்கள் கணிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

### 2.2.2. மக்களியல் புள்ளிவிபரங்கள்

சனத்தொகை தொகைமதிப்பு 2012 இலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மக்களியல் புள்ளிவிபரங்கள் தயாரிக்கப்பட்டு பாராளுமன்றம், அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள்,

ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் போன்ற பல்வேறு முகவர்களால் விடுக்கப்பட்ட வேண்டகோளுக்கமைய வழங்கப்பட்டன.

குடிசன தொகைமதிப்பு 2012 இல் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் உயிர்வாழ் அட்டவணை (Life Table) தயாரிக்கப்பட்டு திணைக்கள இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது.

அத்துடன் குடிசன, வீட்டு வசதிகள் தொகைமதிப்பு - 2021 இற்கான தொகைமதிப்புக் கண்டத்தின் அளவைத் தீர்மானித்தல் (நகர, கிராமப் பிரிவு பொருட்டு), திருத்தஞ் செய்யப்பட வேண்டிய 210 தொகைமதிப்புக் கண்டங்கள் இனங்காணப்படல் என்பன நடைபெற்றதுடன் அவற்றில் 78 முன்நிரற்படுத்தற் படிவங்கள் இற்றைப்படுத்தலுக்காக களத்துக்கு அனுப்பப்பட்டது.மேலும் பாரிஸ் 21 வேலைத்திட்ட உதவியுடன் “NSDS Country Training Programme” நிகழ்ச்சித்திட்டம் நடத்துதல், புள்ளிவிபர அறிவை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஊடகம் மற்றும் ஆசிரியர்களுக்குத் தெளிவூட்டும் 2 வேலைத்திட்டங்களும் நடைபெற்றன.

## 2.2.3. மேட்டுநிலப் பயிர்கள் மற்றும் கால்நடைகளின் புள்ளிவிபரங்கள்

போக ரீதியாக அறிவிப்போரின் உதவியுடன் சேகரிக்கப்படும் மேட்டு நிலங்களில் பயிரிடப்படும் பயிர்களின் நிலப்பரப்பளவு, உற்பத்திக்குரிய புள்ளிவிபரங்கள் மற்றும் வருடாந்தம் சேகரிக்கப்படும் கால்நடைப் புள்ளிவிபரங்கள் என்பவற்றைத் தொகுத்து அரச கொள்கை வகுத்தல் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்குத் தரவு வழங்கல் என்பன மேற்கொள்ளப்பட்டது..

இங்கு நிரந்தரப்பயிர்கள், தற்காலிகப் பயிர்கள் என்பவற்றின் கீழ் சிறு ஏற்றுமதிப் பயிர்கள், பழங்கள், மரக்கறி வகை, தானியங்கள் போன்றன அடங்கலாக 60 வகைகளை உள்ளடக்கியவாறு பயிரிடப்பட்ட நிலப்பரப்பளவு, அறுவடை செய்யப்பட்ட பெரும்போகம் மற்றும் சிறுபோகத்துக்காக மதிப்பிடப்பட்டு வெளியிடப்படுகிறது.

## 2.2.4 கால்நடைப் புள்ளிவிபரம் சேகரித்தல் - 2016

2016 இல் கால்நடைப் புள்ளிவிபரங்களின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு கால்நடை வளர்க்கப்படும் சகல வீட்டுக் கூறுகள், அரச, தனியார் பண்ணைகளுக்குச் சென்று தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இங்கு பசு, எருமை, ஆடு, செம்மறியாடு, பன்றி, கோழி, வாத்து போன்றவற்றின் தகவல்களும் விலங்குகளின் எண்ணிக்கையும் பால், தயிர், முட்டை உற்பத்தி சம்பந்தமான தகவல்களும் கி.உ.பிரிவு ரீதியாகச் சேகரிக்கப்படுகின்றன.

சேகரிக்கப்படும் தகவல்கள் பி.செ.பிரிவு ரீதியாகவும் மாவட்ட ரீதியாகவும் தயாரிக்கப்பட்டு 2016 இற்காக மேற்குறிப்பிட்ட விலங்கு வகைக்கும் பால், முட்டை உற்பத்தி சம்பந்தமான மதிப்பீடும் தயாரிக்கப்பட்டது.

## 2.2.5 இறைச்சிக்காக கொல்லப்படும் விலங்குகளின் புள்ளிவிபரங்கள்

2016 ஆம் ஆண்டில், 2015 இற்கான உள்ளூராட்சி நிறுவனங்களின் ஊடாக இறைச்சிக்காக விலங்குகளைக் கொல்லும் உரிமம் பெற்ற விலங்குகள் அறுக்கும் நிலையங்களிலிருநது சேகரிக்கப்பட்டன.

இத்தகவல்களின் ஊடாக 2015 ,ற்கான, மாவட்ட ரீதியாக இறைச்சிக்காக்க் கொல்லப்படும் விலங்குகளின் புள்ளிவிபர்ங்கள் தயாரிக்கப்பட்டன.

### 2.2.6. உணவு ஐந்தொகைத்தாள்

நபர் ஒருவருக்குரிய உணவு வழங்கல் வருடாந்த ஐந்தொகைத்தாளில் காட்டப்பட்டுள்ளது. நாட்டின் போஷாக்கு மட்டம் மேற்படி சுட்டெண்ணினூடாக குறிப்பிடப்படுகிறது. 2015 இன் விவசாய உற்பத்திகளைக் கருத்திற் கொண்டு இது தயாரிக்கப்பட்டுள்ளது.

### 2.2.7. இலங்கைத் தேசிய கணக்குகள்

இலங்கைத் தேசிய கணக்குகள் தயாரிக்கும் உத்தியோகபூர்வமான பொறுப்பு தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்திடம் வழங்கப்பட்டுள்ளதுடன் காலாண்டு ரீதியான, வருடாந்த ரீதியான தேசிய கணக்குகளும் தயாரிக்கப்படுகின்றன.

2016 இல் 2010 ஐ அடிப்படை வருடமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட தேசிய கணக்குகள் மற்றும் ஏனைய விடயங்கள் பின்வருமாறு :

1. வருடாந்த மொத்த உள்நாட்டு உற்பத்தி, ஏனைய நுண்-பொருளாதார குறிகாட்டிகள் என்பன 2010 ஐ அடிப்படையாகக் கொண்டு 2015 இற்கான உற்பத்தி, வருமானம், செலவினம் என்பவற்றினூடாகத் தயாரிக்கப்பட்டன. காலாண்டு ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் ஏனைய நுண்-பொருளாதாரக் குறிகாட்டிகள் என்பன, 2010 இன் அடிப்படையில் 2015 இன் 4 ஆம் காலாண்டிற்கும் 2016 இன் 1ஆம், 2ஆம் , 3ஆம் காலாண்டுகளின் பொருட்டு உற்பத்தி, செலவினம் ஆகிய இரு அனுகுமுறைகளினூடாகத் தயாரிக்கப்பட்டன. இம்மதிப்பீடுகள் பொதுமக்களுக்கு வெளியிடப்பட்டதுடன் திணைக்கள இணையத்திலும் பிரசுரிக்கப்பட்டது.

2. 2015 வருடத்தினதும் , 2015 நான்காம் காலாண்டினதும் மதிப்பீடுகள் வெளியிடுகையில், ஊடகத்தைத் தெளிவுபடுத்தும் பயிற்சிப்பட்டறை நடத்தப்பட்டது.

3. மீளாய்வுக் கொள்கையினால் கூறப்பட்டவாறு, 2014 இன் காலாண்டு, வருடாந்த மதிப்பீடுகளும் 2016 இன் 1ம், 2ம் காலாண்டு மதிப்பீடுகளும் மீளாய்வு செய்யப்பட்டு திணைக்கள இணையத்தில் பிரசுரிக்கப்பட்டது.

4. தேசிய கணக்குத் தரவுகளை மேம்படுத்தும் பொருட்டு தரவு வழங்கும் நிறுவனங்களான விவசாய, கைத்தொழிற் பிரிவுகளுக்கு ஒவ்வொரு பயிற்சிப்பட்டறையும் சேவைகள் பிரிவுக்கு 3 பயிற்சிப்பட்டறைகளும் நடத்தப்பட்டன.

5. இலங்கையின் பொருளாதாரச் செயற்பாடுகளினால் வழங்கப்படும் பொருட்கள், சேவைகளின் முடிவுப் பொருள், இடைநிலை, இறுதி நுகர்வு, ஏற்றுமதி, இறக்குமதி, மொத்த மூலதனவாக்கம் போன்றன சம்பந்தமான விரிவான தகவல் வழங்கும் “வழங்கல், பயன்பாட்டு அட்டவணை” 2010 ஆம் ஆண்டை அடிப்படை வருடமாக்க் கொண்டு இற்றைப்படுத்தப்பட்டது. 2010 ஆம் ஆண்டிற்காக உள்ளீட்டு வெளியீட்டு அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு திணைக்கள இணையத்தில் பிரசுரிக்கப்பட்டது.

6. சார்க் நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி இந்தியாவில் 2016 இல் நடைபெற்ற சார்க் மாநாட்டுக்குத் தேவையான தகவல்களை வழங்குதல் மற்றும் “சார்க் நாடுகளின் தேசிய கணக்கு மதிப்பீடுகள் 2015” தயாரித்தல் என்பன மேற்கொள்ளப்பட்டதுடன் ஏனைய உள்நாட்டு, வெளிநாட்டு முகவர்களுக்குத் தேவையான தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு காலத்தோடு அனுப்பி வைக்கப்பட்டன.

7. 2010ஐ அடிப்படை வருடமாக்க் கொண்டு "இலங்கைத் தேசிய கணக்குகள் - 2015" வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது.

**அட்டவணை 2 : வருடாந்த தேசிய கணக்குகள் மதிப்பீடுகளின் பிரதான குறிகாட்டிகள் 2013 - 2016 (2010 அடிப்படை வருடம்)**

| சுட்டெண் | 2013 | 2014* | 2015* | 2016** |
|---|---|---|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி (%) | 3.4 | 5.0 | 4.8 | 4.4 |
| தனிநபரின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ரூபா) | 466,112 | 498,828 | 522,355 | 558,363 |
| தனிநபரின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (அ.டொலர்) | 3,610 | 3,821 | 3,844 | 3,835 |
| தனிநபரின் மொத்த தேசிய வருமானம் (ரூபா) | 455,126 | 487,462 | 508,936 | 542,669 |
| தனிநபரின் மொத்த தேசிய வருமானம் (அ.டொலர்) | 3,525 | 3,734 | 3,745 | 3,727 |
| தனிநபரின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (அ.டொலர்) வளர்ச்சி (%) | 7.7 | 5.8 | 0.6 | -0.2 |
| தனிநபரின் மொத்த தேசிய வருமானம் (அ.டொலர்) வளர்ச்சி (%) | 7.1 | 5.9 | 0.3 | -0.5 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உள்ளடக்கமாக விலைச்சுட்டெண்(2002=100) | 122 | 126 | 127 | 131 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உட்கிடை விலைச் சுட்டெண்ணின் படி பணவீக்கம் (%) | 6.2 | 2.9 | 0.8 | 3.6 |

* மீளாய்வு செய்யப்பட்டது ** தற்காலிகமானது

**அட்டவணை 3 ; காலாண்டு தேசிய கணக்கு மதிப்பீடுகளின் பிரதான குறிகாட்டிகள், 2014 1ம் காலாண்டு - 2016, 3ஆம் காலாண்டு (அடிப்படை - 2010)**

| சுட்டெ | 2014* | | | | 2015* | | | | 2016** | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | காலாண்டு | | | | காலாண்டு | | | | காலாண்டு | | | |
| | 1 | 2 | 3 | 4 | 1 | 2 | 3 | 4 | 1 | 2 | 3 | 4 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி (%) | 1.3 | 2.2 | 5.1 | 10.6 | 4.6 | 7.0 | 5.3 | 2.9 | 5.1 | 2.4 | 4.6 | 5.3 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் உள்ளடக்கமாக விலைச்சுட்டெண்( 2002=100) | 132.3 | 128.0 | 126.8 | 117.8 | 135.2 | 128.8 | 127.5 | 117.7 | 139.1 | 134.8 | 128.9 | 124.4 |
| மொத்தஉள்நாட்டு உற்பத்தியின்உட் கிடைவிலைச்சுட் டெண்ணின்படிப ணவீக்கம் (%) | 2.7 | 4.2 | 2.8 | 2.5 | 2.2 | 0.6 | 0.5 | -0.1 | 2.9 | 4.6 | 1.1 | 5.7 |

* மீளாய்வு செய்யப்பட்டது ** தற்காலிகமானது

## 2.2.8. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் - (அடிப்படை 2013=100)

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட அண்மைய நுகர்வோர் விலைச் சுட்டெண், தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணாகும். திணைக்களம், இச்சுட்டெண்ணை ஒக்ரோபர் 2015 இலிருந்து மாதாந்தம் 21 நாட்கள் இடைவெ ளியில் வெ ளியிடுகிறது. இச்சுட்டெண் 2012/2013 இல் நுகர்வோர்செலவு அடிப்படையான நிறைகளைக் கொண்டுள்ளதுடன், சர்வதேச சிறந்த பழக்கங்களுடன் கூடிய புதிய முறைகளையும் பிரதிபலிக்கும் வகையில் சகல மாகாணங்களிலும் உள்ள விலைகள் சேகரிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது.

திணைக்களமானது, 1953 இலிருந்து ஏப்ரல் 2008 வரை கொழும்பு மாநகரப் பிரதேசத்துக்கான நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை மாத்திரம் கணித்து வெ ளியிட்டு வந்தது. 2008,மே மாத்த்திலிருந்து திணைக்களம் கொழும்பு மாவட்டத்திலுள்ள நகரப் பிரதேசங்களை உள்ளடக்கி சுட்டெண் கணிப்பிட்டு வருகிறது. எனினும் முழு நாட்டுக்குமான விலை மாற்றத்தை அளவிடுவதற்கான தேவை எழுந்த்து. குடித்தன வருமான, செலவின அளவீடு 2012/13, நாட்டிலுள்ள சகல குடித்தனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நுகர்வுச் செலவினத்தின் சகல வகைகளையும் உள்ளடக்கியுள்ளது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படை வருடமாக 2013 கருதப்படுகிறது. தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிற்காக ஒவ்வொரு மாவட்ட நகரத்திலுள்ள 03 விலை சேகரிப்பு நிலையங்களிலிருந்து சந்தைக் கூடையிலுள்ள ஒவ்வொரு விடயத்தின் பொருட்டும் விலை சேகரிக்கப்படுகிறது.

திணைக்களம் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடிப்படை 2013 = 100) ஐ இலங்கையிலுள்ள பணவீக்கத்தின் உத்தியோகபூர்வ அளவீடாக 2015 ஒக்ரோபரில் இருந்து வெளியிட ஆரம்பித்தது. 2015 இனதும் 2016 ஜனவரி - நவம்பர் வரையானதுமான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவுகள் பின்வருமாறு :

**அட்டவணை 4: கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (அடிப்படை 2013=100)**

| மாதம் | சுட்டெண் | |
|---|---|---|
| | 2015 | 2016 |
| ஜன. | 112.8 | 112.0 |
| பெப். | 108.9 | 110.8 |
| மார்ச் | 107.6 | 110.0 |
| ஏப். | 107.0 | 111.6 |
| மே | 108.0 | 113.7 |
| யூன் | 109.1 | 116.1 |
| யூலை | 108.9 | 115.2 |
| ஓக. | 108.4 | 113.3 |
| செப். | 108.4 | 113.5 |
| ஒக்ரோ. | 109.2 | 114.7 |
| நவம்பர் | 112.0 | 116.6 |
| டிசம்பர் | 113.2 | 118.0 |

## 2.2.9. சில்லறை மற்றும் உற்பத்தியாளர் விலைகள்

விலைகளும் கூலிகளும் பிரிவின் பிறிதொரு செயற்பாடு, மாவட்ட சில்லறை மற்றும் உற்பத்தியாளர் விலைகளைச் சேகரித்தலாகும். சில்லறை விலை சேகரிப்புப் படிவங்கள் மாகாண அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. பொருட்கள் மற்றும் நானாவித விடயங்களின் சில்லறை விலைகள் சகல மாவட்ட நகரங்களிலும் திணைக்களக் கள அலுவலர்களை அமர்த்தி வாராந்தமும் இரு வாரங்களுக்கொரு முறையும், மாதாந்தமும் காலாண்டு ரீதியாகவும் சேகரிக்கப்டுகின்றன. உள்ளூரில் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர் விலை சேகரிப்பு, பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக இணைக்கப்பட்டுள்ள அலுவலர்களால் மேற்கொள்ளப்படுகிறது.

2015 ஜனவரி - டிசம்பர் வரையான காலத்தை உள்ளடக்கி கொழும்பு மாவட்டத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட பொருட்களின் வாராந்த சில்லறை விலைகள் சம்பந்தமான விலைச் செய்தி வெளியீட்டின் 24 ஆவது பதிப்பு அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. அத்துடன் 2012 - 2015 காலப்பகுதியை உள்ளடக்கி தெரிவு செய்யப்பட்ட சில்லறை மற்றும் உற்பத்தியாளர் விலைகளின் செய்தி வெ ளியீட்டின் 33 ஆவது பதிப்பும் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்து.

இந்த சில்லறை மற்றும் உற்பத்தியாளர் விலைகள் தேசிய கணக்குள் கணிப்பிடும் பொருட்டு திணைக்களத்தின் தேசிய கணக்குகள் பிரிவிற்கும் தரவுப் பாவணையாளர்களின் தேவை பொருட்டும் வழங்கப்படுகின்றன. தெரிவு செய்யப்பட்ட அத்தியாவசியப் பொருட்களின் திறந்த சந்தைச் சில்லறை விலைகள் பற்றிய செய்தி வெளியீடுகள் தயாரிக்கப்பட்டு ஜனாதிபதி செயலாளர், நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கியின் உரிய அதிகாரிகளுக்கு வாராந்தம் அனுப்பப்பட்டன. வாராந்த விலைத் தகவல்கள் திணைக்கள இணையத்திலும் பிரசுரிக்கப்பட்டன. ஆயுதப்படையின் அலுவலர் மற்றும் ஏனைய தரத்தினருக்கான உணவு விடயங்களின் நாளாந்தச் செலவினம் 2016 இற்காக மாதாந்த அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டு இராணுவத் தளபதியிடம் கையளிக்கப்பட்டது.

## 2.2.10. உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் (PPI) (அடிப்படை 2013 Q4=100)

நாட்டின் தேசிய புள்ளிவிபர நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்படும் அடிப்படை விடயமாக உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் இனங்காணப்படுவதுடன் உள்நாட்டு உற்பத்தியாளர் தமது உற்பத்திகளுக்கு பெறும் விலை வேறுபாடுகள் இதன் மூலம் கணிக்கப்படுகிறது. இவ்வகைத் தேசிய கணக்குகள் கணிப்பிடலுக்கும் அதன் தர மேம்பாட்டுக்கும் இவ்விலைச் சுட்டெண் அவசியமானதாகும். இலங்கை மத்திய வங்கிபோன்ற நிறுவனங்கள், திட்டவாக்கவியலாளர்கள் போன்றோர்க்கும் இது அவசியமானதாகும்.

மாதாந்த விவசாய விலைகள், திணைக்களத்தின் கள அலுவலர்களால் பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக சேகரிக்கப்படுகின்றன. விவசாயப் பொருட்களின் விலைகள், பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மூன்று விவசாய நிலையங்களிலிருந்து சேகரிக்கப்படுகின்றன. உற்பத்தி மற்றும் பயன்பாட்டுப் பிரிவின் மாதாந்த உற்பத்தியாளர் விலைகள் காலாண்டு ரீதியாகச் சேகரிக்கப்படுகின்றன. உற்பத்திப் பிரிவின் உற்பத்தியாளர் விலைகள் மேல்,தென், மத்திய மாகாணங்களிலுள்ள 375 நிறுவனங்களிலிருந்து சேகரிக்கப்படுகின்றன. இச்சுட்டெண்ணின் அடிப்படைக்காலம் 2013, 4 ஆம் காலாண்டுக்கும், உற்பத்தியாளர் விலைச்சுட்டெண் முதல் தடவையாக 2015 இரண்டாம் காலாண்டின் பொருட்டு வெளியிடப்பட்டது. 2015, 2016 முதலாம் காலாண்டு மூன்றாம் காலாண்டு என்பவற்றுக்கான உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்ணின் அசைவுகள் பின்வருமாறு :

**அட்டவணை 5: உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்ணின் அசைவுகள் (அடிப்படை2013 Q4=100)**

| மாதம் | சுட்டெண் | |
|---|---|---|
| | **2015** | **2016** |
| ஜன. | 107.3 | 103.7 |
| பெப். | 103.2 | 105.8 |
| மார்ச் | 101.9 | 101.4 |
| ஏப். | 102.9 | 102.6 |
| மே | 105.8 | 104.8 |
| யூன் | 105.5 | 107.0 |
| யூலை | 107.2 | 107.8 |
| ஓக. | 105.3 | 106.0 |
| செப். | 105.8 | 107.0 |
| ஒக்ரோ. | 104.7 | 109.9 |
| நவம்பர் | 106.3 | 113.4 |
| டிசம்பர் | 107.2 | 115.3 |

### 2.2.11. சர்வதேச ஒப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நடத்தப்படும் ஆசிய பசுபிக் சர்வதேச ஒப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்டத்திலுள்ள புறக்கோட்டை, கிராண்ட்பாஸ், வெள்ளவத்தை, நாரஹென்பிட்ட, கடுவலை, ஹோமாகம ஆகிய இடங்களில் 297 விடயங்களை உள்ளடக்கி வாராந்த ரீதியாகவும் (42 விடயங்கள்), மாதாந்த ரீதியாகவும் (71 விடயங்கள்) காலாண்டு ரீதியாகவும் (114 விடயங்கள்) ஆண்டுக்கு இரு முறையாகவும் (70 விடயங்கள்) விலைகள் சேகரிக்கப்படுகின்றன. 2016 இன் பொருட்டு சகல சேகரிக்கப்பட்ட விலைகளும் சரிபார்க்கப்பட்டு கணனிப்படுத்தப்பட்டு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு அனுப்பப்பட்டன.

### 2.2.12. உள்ளூராட்சிப் புள்ளிவிபரம்

திணைக்களத்தினூடாக ஒவ்வொரு வருடமும் உள்ளூராட்சி புள்ளிவிபரம் தயாரிக்கப்படுகிறது. இதன்பொருட்டு சகல மாநகரசபைகள், நகரசபைகள், பிரதேச சபைகளை உள்ளடக்கி உள்ளூராட்சி நிறுவனங்களின் வருமான,செலவினத் தரவுகள் மற்றும் அதனூடாக வழங்கப்படும் சேவைகள், உட்கட்டமைப்பு வசதிகள் அடங்கலாக பொதுத் தகவல்கள் என்பன சேகரிக்கப்படுகின்றன. இந்த சகல தகவல்களும் மாவட்டப் புள்ளிவிபரப் பிரிவினூடாக உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு பெறப்படும் தகவல்கள் ஆய்வு செய்யப்பட்டு இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி கணிப்பிடலுக்காக திணைக்களத்தின் தேசிய கணக்குகள் பிரிவுக்கு வழங்கப்படுவதுடன் வருடாந்தம் வெளியிடப்படும் புள்ளிவிபரத்தொகுப்பு, புள்ளிவிபரக் கைநூல் போன்றவற்றிலும் இத்தகவல்கள் உள்ளடக்கப்படுகின்றது.

### 2.2.13. ஆராய்ச்சி மற்றும் விசேட கற்கை நடவடிக்கைகள்

#### I. உத்தியோகபூர்வ புள்ளிவிபர நிகழ்ச்சித்திட்டம்

உத்தியோகபூர்வ புள்ளிவிபர நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக நாட்டின் பல்வேறு நிறுவனங்களின் தரவுகளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் சுட்டெண்களை இனங்கண்டு முறைப்படி வழங்குதற்குத் தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிகழ்ச்சித்திட்டம் தேசிய தரவுக் குழுவுடன் இணைந்த 23 உபகுழுக்களின் ஊடாக மேற்கொள்ளப்படுவதுடன் இங்கு ஒவ்வொரு விடயத்திற்குமுரிய

பிரதான நிறுவனங்களை இனங்கண்டு அந்நிறுவனங்களின் பிரதிநிதிகளை அடையாளப்படுத்தும் உபகுழு இருப்பின் அவ்வுப குழுவின் ஊடாக களத்துக்குரிய சுட்டெண்களை இனங்கண்டு அச்சுட்டெண் தயாரிக்கும் முறை, வெளியிடப்படும் கால அளவு போன்றவற்றை உள்ளடக்கிய முழு அறிக்கை ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும். 2016 முடிவில் இவ்வுப குழுக்களில் 22 முற்றாக பர்த்திசெய்யப்பட்டு இறுதி அறிக்கை கையளிக்கப்பட்டது. ஏனைய உப குழுக்களின் வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## II. ஆண்,பெண் பிரிவு ரீதியான புள்ளிவிபரங்களை தயாரித்தல்

திணைக்களத்தால் நடத்தப்படும் தொகைமதிப்புகள், அளவீட்டுத் தகவல்கள், ஏனைய ஆதாரங்களைப் பயன்படுத்திப் பெற்ற தகவல்களைக் கொண்டு ஆண், பெண் பிரிவு ரீதியான புள்ளிவிபரங்கள் தயாரிக்கப்பட்டு அவை திணைக்கள இணையப் பக்கத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

## III. தேசிய தகவல்கள் ஆணைக்குழுவுக்குரிய பணிகள்

நாட்டின் தரவு வழங்கும் மூன்று பிரதான நிறுவனங்களான தொகைமதிப்புத்,புள்ளிவிபரத் திணைக்களம் , இலங்கை மத்திய வங்கி , பொதுத் திறைசேறி மற்றும் தேசிய தொடர்பாடற் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து அண்மைய , நம்பத்தகுந்த தரவுகளை வெளியிடுதல் , பரிசீலித்தல் , தரவுகளின் பிரதி உருவாதலைத் தவிர்த்தல் , சகலருக்கும் தரவு வழங்கல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு 2015 இல் தேசிய தகவல் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டது. தகவல் குழுக் கூட்டங்களில் பங்கு பற்றுவதன் மூலம் இக்குழு வேலைகளில் ஈடுபடுதல் , திணைக்களத்தால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது.

## IV. சார்க் புள்ளிவிபரங்கள் தயாரித்தல்

சார்க் அமைப்பு நாடுகளின் புள்ளிவிபர நிறுவனங்களால் வருடாந்தம் சார்க் அமைப்பு செயலகத்திற்கு அனுப்ப வேண்டிய SAARC in figures , SAARC Statistical Year Book வெளியீடுகளில் இலங்கைக்குரிய புள்ளிவிபரங்கள் / சுட்டெண்கள் SAARC Expert Group, SAARC Catalogue of Publications, SAARC Manual, Statistical Systems ஆகிய அறிக்கைகளும் சார்க் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. சார்க புள்ளிவிபர நிறுவனங்களின் தலைவர்களின் வருடாந்த கூட்டத்தில் உடன்பட்டவாறு, இலங்கைக்குரிய சகல ஆவணங்களினதும் சமர்ப்பித்தல் ஒருங்கிணைக்கப்பட்டது.

## V. வெளிநாட்டு வினாக்களுக்கு விடையளித்தல்

ஐக்கிய நாடுகள் அமைப்பின நிறுவனங்கள், ஏனைய சர்வதேச மற்றும் பிராந்திய அமைப்புக்களால் அனுப்பப்படும் வினாக்களுக்கு விடையளித்தல், சர்வதேச நிறுவனங்களின் தரவு விண்ணப்பங்களுக்கு திணைக்களத்தால் கணிக்கப்படும்தரவுகளையும் ஏனைய நிறுவனங்களால் வழங்கப்படும் தரவுகளையும் அந்நிறுவனங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் என்பன மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் சர்வதேச அமைப்புக்கள் / நிறுவனங்களினால் புள்ளிவிபரப் பிரிவுக்குரிய பல்வேறு வெளியீடுகளுக்கான கருத்துக்கள் ஆராய்தல் மற்றும் விபரம் கேட்கும் சந்தர்ப்பத்தில் உரிய உள்நாட்டு நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு தேவைகளைப் பூர்த்தி செய்தலும் திணைக்களத்தால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது.

## VI. ஆராய்ச்சியும் விசேட கற்கைகளும்

திணைக்கள அலுவலர்களை ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தலும் அதனூடாக திணைக்களத்தினுள் ஆராய்ச்சி நடவடிக்கையில் அவர்களை பிரசித்தமடையச் செய்தலும் இதன் நோக்கமாகும். திணைக்களத்தினுள் ஆராய்ச்சி நடவடிக்கையில் ஈடுபட விரும்பும் நிறைவேற்றுத்தர

அலுவலர்களிடமிருந்து அடிப்படை ஆராய்ச்சி பிரேரணைகள் பெறப்படுவதுடன் அவ்வலுவலர்களுக்கு முறைசார் ஆராய்ச்சிப் பிரேரணை தயாரிக்கும் முறை பற்றியும் ஆராய்ச்சி முறை பற்றிய பயிற்சி பெறும் சந்தர்ப்பத்தை வழங்குதல் பற்றியும் திட்டமிடப்படுகிறது.

#### VII. தத்துவமானி பட்டங்களுக்கான புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டங்கள்

இந்நிகழ்ச்சித்திட்டம், திணைக்கள வேலைகளை அலுவலர்களுக்கு உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் நடத்தப்படும் கலாநிதிப்பட்டக் கற்கை நெறிகளில் இணைந்து கொள்ள ஊக்குவிக்கும் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நிறைவேற்றுத்தர அலுவலர் உள்ள பிரிவுகள், நிறுவனங்களுக்கு நிகழ்ச்சித்திட்டம் பற்றிய விபரங்களையும் விண்ணப்பங்களையும் அனுப்பி, அதில் பங்கு கொள்ள விரும்பி பூரணப்படுத்திய விண்ணப்பங்கள் மேலதிக நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளன.

#### VIII. முற்கூட்டிய தரவு வெளியிடப்படும் நாட்குறிப்பு

முற்கூட்டிய தரவு வெளியிடப்படும் நாட்குறிப்பு 2016 இற்காக வருடத் தொடக்கத்தில் தயாரிக்கப்பட்டு திணைக்கள இணையத்தில் பிரசுரிக்கப்பட்டது. இதனை இற்றைப்படுத்தல் தொடர்ச்சியாக வருடம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டது.

### 2.2.14. வியாபார சம்பந்தமான புள்ளிவிபரப் பதிவேடு (Statistical Business Register)

வியாபார சம்பந்தமான புள்ளிவிபரப் பதிவேடு தயாரித்தலுக்குத் தேவையான நிறுவனம் பற்றிய தகவல்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து பெறப்படுவதுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களம், கம்பனிப் பதிவாளர் திணைக்களம், சுற்றுலாச் சபை ஆகிய நிறுவனங்களின் தரவுத்தளத்துடன் இப்புள்ளிவிபர வேலைத்திட்டத்தின் கீழ் சர்வதேச வலைப்பின்னல் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரதிநிதிகள், இப்புள்ளிவிபர வேலையுடன் தொடர்புடைய ஏனைய நிறுவன உறுப்பினர்களின் பங்களிப்புடன் பயிற்சிப்பட்டறை ஒன்று நடத்தப்பட்டதுடன் நிறுவனச் சட்டகத்தினுள் இருமுறை கணக்கிடப்பட்ட நிறுவனத்தை நீக்குதல், நிறுவனச் சட்டகத்தைச் சீராக்குதல் என்பனவும் மேற்கொள்ளப்பட்டன.

### 2.2.15. கட்டடப் புள்ளிவிபரங்கள்

இலங்கையின் மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சிப் பிரதேச சபைகளை உள்ளடக்கியவாறு மாதாந்தம் கட்டடப் புள்ளிவிபரங்கள் சேகரிக்கப்படுகின்றன. இப்புள்ளிவிபரங்கள், பிரதேச செயலகப் பிரிவுகளில் இணைக்கப்பட்ட புள்ளிவிபர உத்தியோகத்தர் அல்லது புள்ளிவிபர உதவியாளரினால் சேகரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு மாதமும் இசைவுச் சான்றிதழ் வழங்குதல் சம்பந்தமான தகவல்கள், கட்டடப் புள்ளிவிபரங்கள் சேகரிக்க உதவும் BS/U/NEW படிவத்தைப் பயன்படுத்தி சேகரிக்கப்படுகின்றன. அதன்கீழ் பூர்த்தி செய்யபட்ட புதிய கட்டடங்கள், இணைப்புகள் மாற்றஞ் செய்யப்படும் குடியிருப்புகள், வசிப்பிடமல்லாத கட்டடங்கள் என்பவற்றின் மாடிகளின் எண்ணிக்கை, நிலப்பரப்பளவு, மதிப்பிடப்பட்ட செலவினம் என்பன பெறப்பட்டன. மேலும் அக்கட்டடங்களின் நிலம், சுவர், கூரை என்பவற்றுக்குப் பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்களும் சேகரிக்கப்பட்டன. ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்ட கட்டட உரிமங்களின் எண்ணிக்கை, கட்டடத்தின் கீழான நிலப்பரப்பு என்பனவும் வினாக்கொத்தின் பகுதி II இனூடாகச் சேகரிக்கப்படுகின்றன.

மாதாந்தம் சேகரிக்கப்படும் கட்டடப் புள்ளிவிபரங்களின் செம்மையைச் சரிபார்க்கும் பொருட்டு ஒவ்வொரு மாதமும் மாவட்டப் புள்ளிவிபரவியலாளர் ஊடாக உள்ளூராட்சி நிறுவனம் ஒன்றின் தகவல் சேகரித்தல் மேற்பார்வை செய்யப்படுகிறது.

கட்டடப் புள்ளிவிபரம் சேகரித்தல் புதிய மாதிரிப் படிவமான BS/U/NEW ஊடாக 2015 யூலை மாதத்திலிருந்து தரவு சேகரித்தற் கள வேலைகள் மேற்கொள்ளப்படுகிறது. இதுவரை பெற்ற தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு வருடாந்த புள்ளிவிபரத் தொகுப்பிற்கு தயாரித்தலுக்கு வழங்கப்படுகிறது.

### 2.2.16. கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP)

இச்சுட்டெண் கணித்தலுக்கு கைத்தொழில் உற்பத்தியில் உயர் பங்களிப்புச் செலுத்தும் கைத்தொழிற் பொருட்கள் உள்ளக்கப்படுகின்றன. இங்கு கைத்தொழிற் பிரிவின் வளர்ச்சி, குறுகிய காலப் பொருளாதாரப் போக்கு, நடத்தை என்பன இச்சுட்டெண்ணினால் இனங்காணப்படுகின்றன. 2016 இன் முதலாம், இரண்டாம், மூன்றாம் காலாண்டுக்கான கள நடவடிக்கைகள், 2016 இன் முதலாம், இரண்டாம், மூன்றாம் காலாண்டு ஒக்ரோபர் மாதத்திற்கான உற்பத்திச் சுட்டெண் கணித்தல், அறிக்கை வெளியிடல் என்பன மேற்கொள்ளப்பட்டன.

### 2.2.17. பயிற்சி பிரிவு

புள்ளிவிபரப் பயிற்சிப் பிரிவின் ஊடான 2016 இல் பின்வரும் பயிற்சி நெறிகள் நடத்தப்பட்டன.

| கற்கையின் பெயர் | பயிற்சி பெற்ற அலுவலர் எண்ணிக்கை |
|---|---|
| 1. தமிழ் மொழிப் பயிற்சி (மட்டம் III ) | 117 |
| 2. சிங்கள மொழிப் பயிற்சி | 13 |
| 3. அங்கில மொழிப் பயிற்சி | 35 |
| 4. வெளிநாட்டுக் கற்கையில் பங்குபற்றிய பின் பயிற்சி அமர்வை நடத்துதல் | 16 |
| 5. அடிப்படைக் கணனிப் பயிற்சி | 41 |
| 6. அலுவலக உதவியாளர்களுக்கான பயிற்சிநெறி | 19 |
| 7. சுட்டெண் சம்பந்தமான பயிற்சி | 10 |
| 8. அடிப்படைப் புள்ளிவிபரப் பயிற்சி | 18 |
| 9. SPSS பயிற்சி | 15 |
| 10. மாவட்டப் புள்ளிவிபரப் பிரிவிலுள்ள தகவல் தொழில்நுட்ப அலுவலர்களுக்கான கணனிப் பயிற்சி | 57 |
| 11. அபிவிலுத்தி அலுவலர்களின் வலுவூட்டல் பயிற்சி | 40 |
| 12. கணக்காய்வு வினாக்களுக்கான விடையளித்தல் சம்பந்தமான தெளிவுபடுத்தல் நிகழ்ச்சித்திட்டம் | 34 |
| 13. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாயப் பட்டப்பின்படிப்பு நிறுவன மாணவர்களுக்கான பயிற்சி | 16 |
| 14. தகவல் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சி | 28 |
| 15. அடிப்படைப் புள்ளிவிபரம் பற்றிய கற்கைநெறி (Module பயிற்சி) | 18 |
| 16. பல்லைக்கழகங்களின் தொழில் வல்லுனர்களுக்கான தெளியவுபடுத்தல் நிகழ்ச்சித்திட்டம் | 80 |
| 17. புதிய தகவல் தொழில்நுட்ப அலுவலர்களுக்கான பயிற்சி | 10 |
| 18. கள அலுவலர்களுக்கான தரவு சேகரித்தற் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 15 |

| | |
|---|---|
| 19. அறிக்கை எழுதுதல் பற்றிய பயிற்சி | 13 |
| 20. உள்ளடக்க முகாமைத் தீர்வுக்கான முன்வைப்பு | 24 |
| 21. GIS பிரயோகத்தின் திறந்த மூலம் (Module பயிற்சி) | 26 |
| 22. புதிய புள்ளிவிபரவியலாளர்களுக்கான தெளிவுபடுத்தற் பயிற்சித்திட்டம் | 58 |
| 23. அடிப்படைக் கணனிப் பயிற்சிநெறி | 16 |
| 24. மாதிரி அளவீட்டு முறை மற்றும் மதிப்பிடுதல் சம்பந்தமான பயிற்சிநெறி | 24 |
| 25. திணைக்களத்தில் கணனி வலையமைப்பு மீளமைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம் | 27 |
| 26. களத்தில் தரவு சேகரித்தலில் எதிர்கொள்ளும் சவால்கள் சம்பந்தமான பயிற்சி (Module பயிற்சி) | 27 |
| 27. Master Trainers – Group 1 | 40 |
| 28. Master Trainers – Group 2 | 47 |
| 29. வெளி நிறுவனங்களுடன் இணைந்த திணைக்கள அலுவலர்களுக்கான பயிற்சி | 67 |
| 30. தகவல் தொழில்நுட்ப திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 29 |
| 31. திணைக்கள வலையமைப்பை மீளமைப்பதில் எழும் பிரச்சினைகளைத் தீர்த்தல் | 30 |
| 32. CsPro கணனிப் பயிற்சிநெறி | 26 |

## 2.2.18. தகவற் தொடர்பாடற் தொழில்நுட்ப பிரிவு

திணைக்களத்தினாடாக நடத்தப்படும் தொகைமதிப்புகள், அளவீடுகளின் தரவு வகைப்படுத்தல் நடவடிக்கைகளையும் சில அமைச்சுக்கள், திணைக்களங்களுடன் இணைந்த புள்ளிவிபரப் பிரிவுகளுக்குரிய தரவு வகைப்படுத்தல் நடவடிக்கைகளையும் தகவற் தொடர்பாடற் தொழில்நுட்ப பிரிவு மேற்கொள்கிறது.

### I. தொழிற்பல அளவீடு - 2015/16

மேற்படி அளவீட்டுக்குரிய தரவுக்கோப்புகள் தயாரிக்கப்பட்டு முடிவடைந்துள்ளது.

### II. சுங்கப் புள்ளிவிபரம் - 2015

2015 ஒக்ரோபர் - 2016 செப்ரெம்பர் வரையான தரவுக்கோப்பு தயாரித்தல், வருமானப் புள்ளிவிபரம் தயாரித்தல் என்பன பூர்த்தி செய்யப்பட்டன.

### III. வருடாந்த வேலைவாய்ப்பு அளவீடு - 2016

தொழில் திணைக்களத்தின் புள்ளிவிபரப் பிரிவின் ஊடாக வருடாந்தம் மேற்கொள்ளப்படும் இவ்வளவீட்டின் தரவுக்கோப்புகள் வகைப்படுத்தல் முடிவடைந்துள்ளன.

### IV. பொருளாதாரத் தொகைமதிப்பு - 2013/14

**(கைத்தொழில் மற்றும் விவசாயப் பிரிவு)**

தரவுக்கோப்பு தயாரித்தல், அட்டவணை மாதிரிக்குரிய கணனி நிகழ்ச்சித்திட்டம் என்பன பூர்த்தி செய்யப்பட்டன.

v. **திணைக்கள இணையத்தை விருத்தி செய்தல்**

2016 இற்கு திட்டமிடப்பட்ட திணைக்கள இணைய மேம்படுத்தல் நடவடிக்கைகள் மற்றும் இற்றைப்படுத்தல் நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளன.

vi. **துரிதப்படுத்தப்பட்ட தரவு நிகழ்ச்சித்திட்டம்(ADP)**

திட்டமிடப்பட்ட தரவுத்தள மேம்படுத்தல் மற்றும் இற்றைப்படுத்தல் நடவடிக்கைகள் உரிய வகையில் மேற்கொள்ளப்பட்டது.

vii. **டிஜிட்டல் காட்சிப்படுத்தற் பிரிவு (Digital Display Unit)**

தரவுப் பரம்பற் பிரிவிற்குரிய அண்மைய தரவுகளை உள்ளடக்கி இற்றைப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

viii. **மக்களியல் சுகாதார அளவீடு - 2016**

தரவுக்கோப்பு தயாரித்தல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ix. **" லங்கா சிஸ் " (Lanka SIS) புள்ளிவிபரத் தகவல் முறைமை**

" லங்கா சிஸ் " தகவல் முறையை மேம்படுத்தல் மற்றும் இற்றைப்படுத்தலின் ஊடாக தரவுப் பாவணையாளர்களிற்கு இலகுவாகத் திணைக்களத் தரவுகளைப் பெற்றுக்கொள்ள இயலும்.

x. **சிறுவர் செயற்பாட்டு அளவீடு 2014/15**

சிறுவர் செயற்பாடு சம்பந்தமான புள்ளிவிபரங்கள் தயாரித்தல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

xi. **KOSTAT வேலைத்திட்டம்**

KOSTAT வேலைத்திட்டத்தினூடாக வழங்கப்பட்ட உதவியின் கீழ் நவீன வசதிகளுடன் கூடிய இரு கணனி ஆய்வுகூடங்கள் நிறுவப்பட்டன. அவ்வுதவித்திட்டத்தின் கீழ் CAPI முறை சம்பந்தமான பயிற்சியும் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது.

XII. **அரச, அரச சார்புத்துறை வேலைவாய்ப்பு சம்பந்தமான தொகைமதிப்பு 2016**

இத்தொகைமதிப்பிற்கான கணனி நிகழ்ச்சித்திட்டம் தயாரித்தல் மேற்கொள்ளப்பட்டது.

XIII. **கணனி வலையமைப்பு மீளமைத்தல்**

கணனி சேவரில் இயங்கு மென்பொருளான விண்டோஸ் 12 இனை சம்பந்தமான மென்பொருள் இற்றைப்படுத்தப்பட்டது.

XIV. **கணனிப் பராமரிப்பு**

திணைக்களக் கணனி வலையமைப்பினூடாக வன்பொருள் மற்றும் மென்பொருளை ஒழுங்கான முறையில் இயங்கச் செய்யப்பட்டது.

### 2.2.19. வெளியீட்டுப் பிரிவு

திணைக்களத்தின் எதிர்வரும் வருடத்திற்கான செயற்திட்டம், வருடாந்த செயலாற்றுகை அறிக்கை, புள்ளிவிபரத் தொகுப்பு, புள்ளிவிபரக் கையடக்க நூல் (ஆங்கிலம்/சிங்களம்/தமிழ்), புள்ளிவிபரத் தரவுத்தாள், செய்திமடல் மற்றும் திணைக்களத்தின் கள நாட்குறிப்பேடு தயாரித்தல், வெளியிடுதல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படும் பிரதான வேலைகளாகும்.

களங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சில வருடங்களின் தரவுகளை உள்ளடக்கித் தயாரிக்கப்படும் புள்ளிவிபரத் தொகுப்பு 2016 மற்றும் புள்ளிவிபரக் கையடக்கநூல் - 2016 என்பன உரிய காலத்தினுள் திணைக்கள இணையத்தில் பிரசுரிக்கப்பட்டதுடன் அச்சிடப்பட்டும் விநியோகிக்கப்பட்டது.

திணைக்களத்தின் செயல்நோக்கினை நிறைவேற்றும் நோக்கில் 2017 இற்கான செயற்திட்டம் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டின் கீழ் தயாரிக்கப்பட்டது. திணைக்களத்தின் பிரிவுகள் மற்றும் அமைச்சுகள், திணைக்களங்களில் இணைக்கப்பட்ட புள்ளிவிபரப் பிரிவுகளினூடாக மேற்கொள்ளப்படும் வேலைகள் மற்றும் உரிய வருடத்திற்கான ஆரம்ப அறிக்கை அடங்கலான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை -2015 வெளியிடப்பட்டதுடன் அதன் 350 இறுவட்டுகள் பாராளுமன்றத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது. திணைக்களத்தின் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்கள் அடங்கலாக புள்ளிவிபரச் செய்தி வெளியீடு 2016, ஆண்டுக்கு இரு தடவைகளிலும் பல்வேறு துறைகளின் கீழும் தயாரிக்கப்பட்ட புள்ளிவிபரத் தரவுத்தாள் -2016 மும்மொழிகளிலும் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டதுடன் திணைக்கள இணையத்திலும் வெளியிடப்பட்டது.

திணைக்களத்தினால் வெளியிடப்படும் வெளியீடுகளுக்குரிய ISBN/ISSN இலக்கங்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் அவ் வெளியீடுகளுக்காக விலைகோரல் என்பனவும் உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட்டது.

சேகரிக்கப்படும் தரவுகளை வெளியிடுவதற்கான பிரதான பொறுப்பு திணைக்களத்தைச் சாரும். இவ்வேலைகளை நிறைவேற்றும் பொருட்டு திணைக்களத்தால் வெளியிடப்படும் வெளியீடுகளை விரைவாக உள்நாட்டு / வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடையே விநியோகித்தலும் மேற்கொள்ளப்படுகிறது.

அத்துடன் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சின் பொருட்டு 2016.09.30 ம் திகதி வரையான திணைக்கள செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டது.

### 2.2.20 அச்சிடல் பிரிவு

திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் தொகைமதிப்பு, அளவீடுகளுக்கான படிவங்கள், வினாக்கொத்துக்கள், அறிவுறுத்தல்கள் மற்றும் தொகைமதிப்புக்கள், அளவீடுகளின் அறிக்கைகள் என்பன திணைக்கள அச்சகத்தினால் அச்சிடப்படுகிறது.

2016 இல் பின்வரும் வெளியீடுகள், திணைக்கள அச்சகத்தில் அச்சிடப்பட்டன.

I. புள்ளிவிபரத் தொகுப்பு 2015
II. வெளிக்கள நாட்குறிப்பேடு
III. நெற் புள்ளிவிபர்ஙகள் 2014/15 பெரும்போகம்
IV. பயிர் உற்பத்தியின் முக்கிய குறிகாட்டிகள்
V. குடிசன,வீட்டு வசதிகள் தொகைமதிப்பு - 2012 இறுதி அறிக்கை (சப்ரகமுவ / தென் / வட / மத்திய / வடமேல் / ஊவா / வட மாகாணங்கள்)
VI. பொருளாதாரத் தொகைமதிப்பு - 2013/14 விவசாய நடவடிக்கை பற்றிய கணக்கெடுப்பு உத்தியோகத்தர்களின் சான்றிதழ்கள்
VII. அடிப்படைப் புள்ளிவிபர நூல்
VIII. உருளைக்கிழங்கின் மதிப்பிடப்பட்ட பரப்பளவும் உற்பத்தியும் 2015
IX. தொழிற்பல அளவீட்டு அறிக்கை 2015 (I,II,III ஆம் காலாண்டு)
X. இலங்கையில் சுயமாக அறிவிக்கப்பட்ட தேசிய சுகாதார அளவீடு - 2014
XI. நெற் புள்ளிவிபரம் 2015 (சிறுபோகம்)

XII. வாராந்த சில்லறை விலைகளின் செய்தி வெளியீடு - 2015 (கொழும்பு மாவட்டம்)
XIII. கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
XIV. புள்ளிவிபர செய்தித்தாள் 2016 (1ம் வெளியீடு)
XV. Data Collection Post Module
XVI. வருடாந்த நிறைவேற்றுகை அறிக்கை - 2015
XVII. சுகாதார அறிக்கை
XVIII. கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் அறிக்கை
XIX. புள்ளிவிபர தரவுத்தாள்
XX. அமைச்சின் நிறைவேற்றுகை அறிக்கை
XXI. தொழிற்பல வருடாந்த அறிக்கை - 2015
XXII. அரச, அரச சார்புத்துறை வேலைவாய்ப்பு சம்பந்தமான தொகைமதிப்புக்கான அறிவுறுத்தற் கைநூல் (சிங்களம் / தமிழ்)
XXIII. GIS பிரயோக அலகு
XXIV. கைத்தொழில் உற்பத்தி அறிக்கைச் சுட்டெண்
XXV. உருளைக்கிழங்கு உற்பத்தி மதிப்பீட்டு விவரணம்
XXVI. தொகைமதிப்புத் தரவுத் தாள் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
XXVII. புள்ளிவிபரக் கையடக்க நூல் 2016
XXVIII. விவசாயப் புள்ளிவிபரம் 2015
XXIX. தெரிவு செய்யப்பட்ட சில்லறை, உற்பத்தி விலைகளின் செய்தி வெளியீடு 2012 - 2015
XXX. உணவு ஐந்தொகைத் தாள் (சிங்களம்)

## 2.2.21. வரைபட பிரிவு

2021 ஆம் ஆண்டில் நடத்தப்படவுள்ள குடிசன, வீட்டு வசதிகள் தொகைமதிப்பிற்கு முன்னுரிமைவழங்கி கம்பஹா, குருணாகல், மொனராகல, பதுளை, கேகாலை மாவட்டங்களில் செய்மதிப் படங்கள் தரவிறக்கம் செய்தல் முடிவடைந்துள்ளதுடன் இரத்தினபுரி, நுவரெலியா மாவட்டங்களில் முறையே 17%, 25% மானவை பூர்த்தியடைந்துள்ளன. அத்துடன் அம்மாவட்டங்களிலும் கண்டி, மாத்தளை, அம்பாறை மாவட்டங்களிலும் குடிசன, வீட்டுவசதிகள் தொகைமதிப்பு - 2012 ஐ பயன்படுத்தி வரைபடங்களை ஸ்கானிங் செய்தலும் முடிவடைந்துள்ளன. மேலும் கம்பஹா, குருணாகல், மொகராகல, பதுளை, இரத்தினபுரி, கேகாலை, கண்டி மாவட்டங்களில் புவியியற் தரவு முறை தயார்படுத்தலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. கம்பஹா, களுத்தறை, குருணாகல், பதுளை மாவட்டங்களில் வரைபடங்களை Geo Referencing நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் மொனராகல மற்றும் கேகாலை மாவட்டங்களில் முறையே 4, 5 பிரதேச செயலகப் பிரிவுகளில் Geo Referencing நடவடிக்கை பூர்த்தியடைந்துள்ளது. கிராம உத்தியோகத்தர் பிரிவு வரைபடங்களை டிஜிட்டல்படுத்தும் நடவடிக்கைகள் களுத்தறை, கம்பஹா மாவட்டங்களில் பூர்த்தியடைந்துள்ளதுடன் குருணாகல், பதுளை, மொனராகல மாவட்டங்களில் முறையே 95%, 49%, 09%மான கிராம உத்தியோகத்தர் பிரிவு வரைபடங்கள் பூர்த்தியடைந்துள்ளன. கேகாலை மாவட்டத்தில் வரைபடம் டிஜிட்டல்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தென், வட மாகாணங்களின் மாவட்டங்களில் வரைபடம் டிஜிட்டல்படுத்தல் பரிசீலிக்கப்பட்டு முடிவடைந்துள்ளது.

திணைக்களத்தின் கள அலுவலர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் பாவிப்பதற்கு அறிவுறுத்தற் கைநால்கள் தயாரிக்கப்பட்டதுடன் தொகைமதிப்பு வரைபடங்கள் வரைபடங்கள் தயாரிக்கும் முறையை பரீட்சிக்கும் பொருட்டு களுத்தறை, கம்பஹா மாவட்டங்களில் களப் பரீட்சைகள் நடைபெற்றன. அத்துடன் காலி மாவட்டத்தின் 9 பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய வரைபடங்கள் அச்சிடப்பட்டன. மேலும் அரச

அமைச்சுகள், திணைக்களங்கள் அவை தொடர்பான நிறுவனங்களின் வேண்டுகோளுக்கிணங்க வரைபடம் தயாரித்தலும் மேற்கொள்ளப்பட்டது.

## 2.2.22. தரவுப் வெளியீட்டு பிரிவு

### I. நுண் தரவுகளை வெளியிடுதல்

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களத்தின் நுண் தரவு வெ ளியிடும் கொள்கைக்கிணங்க இவ்வருடத்தில் 72 விண்ணப்பங்களுக்கு இலவசமாகவும் 2 விண்ணப்பங்களுக்கு பண அறவீட்டின்படியும் தரவுகள் வழங்கப்பட்டன.

### II. பாராளுமன்ற வினாக்களுக்கு விடையளித்தல்

இலங்கைப் பாராளுமன்ற அமைச்சர்களின் வாய்மூல வினாக்களுக்கு விடையளிக்கத் தேவையான தகவல்களை வழங்கும் பொருட்டு பணிப்பாளர் நாயகத்திடம் அனுப்பப்படும் விண்ணப்பத்திற்குத் தகவல் வழங்கப்பட்டது. உரிய பாராளுமன்ற வினாவுக்கு திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகளுடன் தொடர்பை ஏற்படுத்தி பதிலைத் தயாரித்து நிதி அமைச்சின் பாராளுமன்ற அலுவல்கள் திணைக்களத்திற்கு விரைவில் இப்பிரிவினூடாக அனுப்பி வைக்கப்படுகிறது. இத்தகைய விண்ணப்பங்கள் 3, 2016 இல் கிடைக்கப் பெற்றதுடன் அவற்றுக்கான பதில்களும் அனுப்பி வைக்கப்பட்டன.

### III. ஏனைய நிறுவனங்களின் தரவு விண்ணப்பத்திற்கு தகவல் வழங்குதல்

பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்படும் பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள்/ ஏனைய அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டவர்களின் விண்ணப்பத்திற்கு ஏற்ப தகவல்கள் வழங்கப்படுகின்றன. இவ்வருடத்தில் சாதாரண தபால் மூலமாகவும் மின்னஞ்சல் மூலமாகவும் 280 தரவு விண்ணப்பங்களிற்கு பதில் வழங்கப்பட்டன.

### IV. திணைக்களப் பணியாளர்களின் தரவுத் தளத்தைப் பேணுதல்

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களப் பணியாளர்களின் தரவுத் தளத்தைப் பேணுவதன் ஊடாக உயர் முகாமைத்துவத் தேவைக்கான தகவல் வழங்குதலும் இப்பிரிவால் செய்யப்படுகிறது. இத்தரவுத்தளம் திணைக்களத்தின் நிர்வாகப் பிரிவால் வழங்கப்படும் தகவல்கள் மற்றும் உரிய அலுவலர்களிடமிருந்து பெறப்படும் தகவல்களைப் பயன்படுத்தி 2016 இல் இற்றைப்படுத்தப்பட்டது.

### V. திணைக்கள வெளியீட்டு விற்பனைக் கருமபீடம் நடத்துதல்

திணைக்களத்தால் வெ ளியிடப்படும் அச்சு வெ ளியீடுகளை விற்பனை செய்தல் இக்கருமபீடத்தில் மேற்கொள்ளப்படுகிறது. மேலும் 2016 பெப்ரவரி 02 ஆம் 03 திகதிகளில் நடைபெற்ற கோட்டை சென் தோமஸ் வித்தியாலய கல்விக் கண்காட்சி பொருட்டும் 2016 ஒக்டோபர் 12,13,14 ஆம் திகதிகளில் நடைபெற்ற கொழும்பு அனுலா வித்தியாலயத்தின் கல்விக் கண்காட்சி பொருட்டும் அவர்களின் வேண்டுகோளின் பிரகாரம் திணைக்கள வெளியீடுகளின் விற்பனைக் கருமபீடம் நிறுவப்பட்டது. அத்துடன் 2016 இல் 552 வெளியீட்டுப் பிரதிகளும் 02 CD இறுவட்டுகளும் விற்பனை செய்யப்பட்டன.

## 2.2.23. நூலக பிரிவு

திணைக்கள நூலகம் கிரகித்தற் பிரிவு, புத்தகம் இரவல் பெறுதற் பிரிவு என இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. கிரகித்தற் பிரிவுச் சேவை திணைக்கள அலுவலர்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன் பின்வரும் சேவைகள் பெற்றுக்கொள்ளும் வசதிகள் நூலகத்தில் உள்ளது.

- பார்வையிடற் சேவை
- பொருளடக்கப் பக்க சேவை
- நூலகத் தரவுத்தள ஆய்வு
- போட்டோப் பிரதிச் சேவை
- நூலக வலையமைப்புச் சேவை

அத்துடன் திணைக்களம் தவிர்ந்த வெ ளியாட்களுக்கு பார்வையிடற் சேவை மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது. திணைக்கள வெளியீடுகள், இலங்கை வெளியீடுகள், சர்வதேச வெளியீடுகள் மற்றும் பல்வேறு விடயங்களுக்குரிய இணை நூல்கள் என்பவற்றைக் கடன் கொடுத்தற் பிரிவு கொண்டுள்ளது. பார்வையிடற் பிரிவில் பழைய திணைக்கள நூல்களும் வைக்கப்பட்டுள்ளன. நூலகத்தில் இல்லாத வெளியீடுகளைப் பார்க்க வேண்டிய தேவை ஏற்படின் நூலக வலையமைப்புச் சேவையின் கீழ் வேறு நூலகங்களிலிருந்து வெளியீடுகளைப் பரிமாற்றம் செய்து கொள்ளலாம்.

### I. நூலக நூல்களை டிஜிட்டல்படுத்தல்

இணைய அடிப்படையான தன்னியங்கு நூலக நூல் விபரத்தொகுப்பு முறையின் கீழ் நூலக நூல்களின் விபரம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதற்காக திறந்த மென்பொருளான KOHA பயன்படுத்தப்படுகிறது.

### II. நூல்களைக் கொள்வனவு செய்தல்

திணைக்கள அலுவலர்களிடமிருந்து பெற்ற பல்வேறு விடயங்களுக்குரிய (புள்ளிவிபரம், கணனி விஞ்ஞானம், பொருளியல், பொது அறிவு, வரலாறு) நூல்களின் பட்டியல் மற்றும் நூலகாதிபதியினால் தெரிவு செய்யப்பட்ட நூல்களின் பட்டியல் என்பவற்றை கொண்டு வெளியீட்டு நிறுவனங்களுக்குச் சென்று தெரிவு செய்யப்பட்ட 200 நூல்கள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டது.

### III. செய்தித்தாள்ப் பிரிவு

நூலகத்தில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்பட்ட நாளாந்த செய்தித்தாள்களை வழங்குதல், திணைக்கள வெளியீடுகள், திணைக்களத்திற்குரிய பத்திரிகைச் செய்திகளை போட்டோப் பிரதி செய்து உரிய பிரிவுகளுக்கு வழங்குதல், தேவையான சந்தர்ப்பத்தில் பெற்றுக்கொண்ட செய்திக்குரிய இணைய முகவரித் தகவல்களை தகவற் தொழில்நுட்பப் பிரிவுக்கு வழங்குதல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

### IV. நீடிக்கப்பட்ட சேவை

- **பொருளடக்கப் பக்க சேவை** (Content Page Service)

  நுலகத்திற்கு உள்நாட்டு, வெளிநாட்டு ரீதியாக கிடைக்கப்பெறும் புத்தகங்கள் சஞ்சிகைகள் பற்றி திணைக்கள அலுவலர்களுக்கு தெளிவுபடுத்தும் பொருட்டு இச்சேவை மேற்கொள்ளப்படுகிறது. இது மாதாந்தம் மின்னஞ்சல் ஊடாக அலுவலர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

- **"அலா அபிமன்" கல்விக் கண்காட்சி**

  நுகேகொடை அனுலா வித்தியாலயத்தின் 75வது வருடப் பூர்த்தியை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்ட 'அனுலா அபிமன்' கல்விக் கண்காட்சிக்கு திணைக்கள வெ ளியீட்டுக் கருமபீடம் ஒன்று 3 நாட்களுக்கு நடத்தப்பட்டது.

- **நூலகத் தரவு முறைமை பற்றி அலுவலர்களுக்குத் தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டம்**

  திணைக்கள நூலகத் தரவுத்தளம் (KOHA) பற்றி அலுவலர்களுக்குத் தெரிவிக்கும் ஒரு நாள் வேலைத்திட்டம் பயிற்சிப் பிரிவில் நடைபெற்றது.

**V. நூலகப் புத்தகங்களின் தொகைமதிப்பு**

திணைக்களத்தின் சொத்து முகாமைப் பிரிவின் நெறியாள்கையின் கீழ் நடத்தப்பட்ட முதலாவது புத்தகம் பற்றிய அளவீடாகும். இவ்வருடாந்த அளவீட்டினால் பெற்றுக்கொள்ளப்படும் தரவுகளின் ஊடாக நூலக முகாமை பற்றி எதிர்காலத் திட்டமிடல் மேற்கொள்ளலாம்.

## 2.2.24. வெளிக்கள முகாமைத்துவப் பிரிவு

மாவட்ட புள்ளிவிபரப் பிரிவுகள் மற்றும் தலைமை அலுவலகத்திற்கிடையில் இணைப்பை ஏற்படுத்தி ஒவ்வொரு பிரிவுகளுக்குமுரிய பல்வேறு ஏற்பாடுகள், பௌதீக வளங்களை வழங்குதல் இப்பிரிவினூடாக மேற்கொள்ளப்படுகிறது. அதன்பிரகாரம் காலாண்டு ரீதியாக மாவட்டப் புள்ளிவிபர பிரவுத் தலைவர்களினதும் கள அலுவலர்களினதும் மாதாந்த பிரயாணச் செலவு, தபால், தொலைதொடர்பு மற்றும் காகிதாதி பொருட்கள், எரிபொருளுக்கான நிதி ஏற்பாடு, சாரதி பட்டா, மேலதிகநேரக் கொடுப்பனவு, மின்சாரம், நீர், சுகாதார நடவடிக்கைகள் போன்ற அலுவலகத் தேவைகளுக்கான ஏற்பாடுகள் இதன் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

இவ்வருடத்துக்கான மாவட்டப் புள்ளிவிபரப் பிரிவுத் தலைவர்களின் வருடாந்த பயிற்சிப்பட்டறை 2016.04.04 ஆம் 05 ஆம் திகதிகளில் ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்றதுடன் மாவட்டப் புள்ளிவிபரப் பிரிவுத் தலைவர்களின் இரண்டாவது வருடாந்த பயிற்சிப்பட்டறை 2016.12.22 ஆம் 23 ஆம் திகதிகளில் வீட்டுத்திட்டம் மற்றும் கட்டட நிலையத்திலும் நடைபெற்றது.

அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகளில் அமைந்துள்ள புள்ளிவிபரப் பிரிவுகளில் பணிகள் பற்றி விசாரித்தல், வளர்ச்சி முறை, எதிர்கொள்ளும் பிரச்சினைகள், தீர்வு யோசனைகள் பற்றி ஆலோசித்தல் என்பன மக்களியல், கைத்தொழில் மற்றும் விவசாயக் குழுக் கூட்டங்களை நடத்துவதன் ஊடாக மேற்கொள்ளப்பட்டது.

வினைத்திறன் மிக்க மாவட்ட அலுவலகத்தைத் தெரிவு செய்யும் முறை, மேற்பார்வைப் பணி ஒப்படைக்கப்பட்ட தலைமை அலுவலகப் பிரிவுகளினால் வழங்கப்படும் அறிக்கைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் முற்பரீட்சையாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதன் பிரகாரம் உரிய மதிப்பீட்டு அறிக்கைகள் இப்பிரிவினால் பெற்றுக்கொள்ளப்பட்டு வருகிறது.

மாவட்டப் புள்ளிவிபரக் கையடக்கநூல் தயாரித்தலுக்குத் தேவையான தரவு அட்டவணைகள் பற்றிய அறிவுறுத்தல்கள் மாவட்டப் புள்ளிவிபரப் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2014 இலிருந்து புள்ளிவிபரக் கையடக்கநூல் தயாரித்தல், மாவட்டப் புள்ளிவிபரப் பிரிவுகளினால் மேற்கொள்ளப்படுவதனால் அதற்கான மாவட்ட அலுவலர்களுக்கு பயிற்சிப்பட்டறை ஒன்று 2016 மார்ச் 17 ஆம் 18 ஆம் திகதிகளில் பயிற்சிப் பிரிவில் நடத்தப்பட்டது. 16 மாவட்டங்களுக்கான புள்ளிவிபரக் கையடக்கநூல் அச்சிடல் பூர்த்தியடைந்துள்ளது.

2017, மாவட்டப் புள்ளிவிபரக் கையடக்கநூல் தயாரித்தலில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் பற்றிக் கலந்துரையாடும் குழுக் கூட்டம் ஒன்று 2016.12.06 ஆம், 07 ஆம் திகதிகளில் கூடிக் கலந்துரையாடப்பட்டது. அதன்பொருட்டு 05 மாவட்டப் புள்ளிவிபரக் கையடக்க நூல் தயாரிக்கும் அலுவலர்கள் பங்குபற்றினர்.

## 2.3 சிலஅமைச்சுகள், திணைக்களங்களிலுள்ள திணைக்கள கிளை அலுவலகங்களில் நடாத்தப்பட்ட தொகைமதிப்புகளும் அளவீடுகளும்

### 2.3.1 வருடாந்த வேலைவாய்ப்பு அளவீடு

இதன் மூலம் நாடு முழுவதிலுமுள்ள அரச, தனியார் துறைப் பணியாளர்கள் மற்றும் ஊழியர் சேமலாபநிதியத்திற்குப் பங்களிப்பு செய்யும் வர்த்தக, சேவை நிறுவனங்கள் சம்பந்தமாக வருடத்தின் யூன் மாத முடிவில் வேலை நாட்களின் அடிப்படையில் தகவல்கள் விகிதாசாரமாகத் தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளின் படி தபால் மூலமாக வருடாந்தத் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. இவ்வறிக்கையின் ஊடாக நாட்டின் வேலைவாய்ப்பு, கைத்தொழில் மற்றும் தொழில் வகுப்பாக்கத் தகவல்கள் அடங்கலாக தொழிலாளர்கள் களத்துக்குரிய தகவல்கள் வருடாந்தம் சேகரிக்கப்பட்டு “ வருடாந்த வேலைவாய்ப்பு அளவீடு ”வெளியிடப்படும்.

### 2.3.2 சராசரி உழைப்புகள், வேலை செய்த மணித்தியாலங்கள் சம்பந்தமான அளவீடு

இவ்வளவீட்டினூடாக கூலி சபைகள் கட்டளைச் சட்டத்தின் கிழ் சம்பளம் பெறும் நிறுவனங்களின் சேவை நிலைக்கேற்ப பணியாளர்களின் உழைப்புகளின் வேறுபாடுகள் ஆராயப்படுகிறது. இங்கு கூலிகள் சபையின் படி தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களில் இருந்து ஒவ்வொரு வருடமும் மார்ச், செம்டெம்பர் மாதங்களில் வருடத்துக்கு இருமுறை தபால் மூலம் தகவல் சேகரிக்கப்படுவதுடன் அதன் மூலம் ஒவ்வொரு சேவை நிலைக்கேற்ப உழைப்பு சம்பந்தமான தகவல் சேகரிக்கப்படுகிறது. இத்தகவல்கள் “சராசரி உழைப்புகள், வேலை மணித்தியாலங்கள் சம்பந்தமான அளவீடு “இல் வெளியிடப்படுவதுடன் அதன் மூலம் சேவை நிலைக்கேற்ப உழைப்புகளும் ஆராயப்படுகிறது.

### 2.3.3 ஆகக் குறைந்த கூலிச் சுட்டெண் தயாரித்தல்

கூலி சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் தொழில் திணைக்களத்தினூடாக கூலிகள் சபையால் நிர்ணயிக்கப்பட்ட ஆகக் குறைந்த கூலி அடிப்படையில் மாதாந்தம் ஆக்க் குறைந்த கூலி வீதச் சுட்டெண் கணிக்கப்படுகிறது. இச்சுட்டெண் விவசாய (பெருந்தோட்டக்) கைத்தொழில், வாணிபம், சேவைகள் போன்ற பிரதான துறைகளுக்கு தனித்தனியாகவும் கூட்டாகவும் கணிக்கப்படுகிறது. அத்துடன் இச்சுட்டெண்களின் மூலம் பிரதான துறைகளிலுள்ள ஆகக் குறைந்த கூலி மட்ட மாற்றங்கள் அளவிடப்படுகின்றன. இச்சுட்டெண் இலங்கை மத்திய வங்கி, தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், சர்வதேச தொழில் ஸ்தாபனம் அடங்கலாக பல்வேறு நிறுவனங்களுக்கு மாதாந்த ரீதியிலும் காலாண்டு ரீதியிலும் வருடாந்தமும் வழங்கப்படுகிறது.

### 2.3.4 தொழிற் புள்ளிவிபரங்களை வெளியிடுதல்

உள்நாட்டு தரவுப் பாவணையாளர்களுக்கு இலங்கைத் தொழிற்பலச் சந்தை தொடர்பான தொழிற் புள்ளிவிபரங்கள், அதில் ஈடுபடும் சனத்தொகை, மக்களியல் தகவல்கள், தொழிற்பலம், விலை, சம்பளம், வருமானம், செலவினம் சம்பந்தமான சமூகப் பொருளாதார மற்றும் தொழில் இணைப்பு, தொழிற் கட்டளைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல் சம்பந்தமான தகவல் அடங்கலாக “ தொழிற் புள்ளிவிபரம் “

எனும் வெளியீடு வருடாந்தம் வெளியிடப்படுகிறது. இதற்குத் தேவையான தகவல்கள் பல்வேறு திணைக்களங்கள், நிறுவனங்களின் ஊடாக சேகரிக்கப்படுகிறது.

நாட்டின் சகல தொழில் நிலையங்களிலிருந்தும் தொழிற் கட்டளைச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் தொழில் மேற்பார்வை மாதாந்த அறிக்கைகள், 14 படிவங்களில் பெறப்பட்டு ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யும் புதிய நிறுவனங்களை இலங்கைக் கைத்தொழில் வகுப்பாக்கத்திற்கேற்ப **CSpro** தரவுத்தளத்திற்கு உள்ளடக்கி தரவுகளை இற்றைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது.

### 2.3.5 கல்விப் புள்ளிவிபரங்கள்

கல்வி அமைச்சிலுள்ள புள்ளிவிபரக் கிளை அலுவலகத்தினூடாக வருடாந்தம் மேற்கொள்ளும் அரச பாடசாலைகளின் தொகைமதிப்பிற்கு சமனாக தனியார் பாடசாலைகள், பிரிவேனாக்கள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், கல்விக் கல்லூரிகள் சம்பந்தமான தகவல்களும் 2016 இல் சேகரிக்கப்பட்டன.

2015, 2016 வருடங்களுக்கு அரச பாடசாலைகள், பிரிவேனாக்கள், தனியார் பாடசாலைகள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் முறைசாராக் கல்விப் பிரிவுகளின் தொகைமதிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தரவுத்தளம் தயாரித்தல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அவ்வருடங்களுக்குரிய ஆரம்ப அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

### 2.3.6 வைத்தியப் புள்ளிவிபரங்கள்

வைத்தியப் புள்ளிவிபரப் பிரிவினூடாக நாடு முழுவதிழுமுள்ள அரச வைத்தியசாலைத் தளத்தின் மூலமாக உள்நோயாளர், வெளிநோயாளர், இறப்புக்கள், நோயாளர் கட்டில்கள், தாய்மாரும் சிறுவர்களும், மனிதவளம், விசேட வைத்திய நிபுணர்கள், பல் வைத்தியர் சேவை போன்ற பிரிவுகள் சம்பந்தமான தரவுகள் சேகரிக்கப்படுவதுடன் உரிய மாதிரிப் படிவங்கள் உரிய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் உரிய காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளப்பட்டது.

2016 இன் இறுதிக் காலாண்டிற்கான உள், வெளி நோயாளர்கள் தொடர்பிலான இறுதி அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அத்துடன் மாதாந்தம் பெறப்படும் சிறுவர் மற்றும் கர்பிணித் தாய்மார் தொடர்பான அறிக்கைகள் திருப்தியான மட்டத்தில் உள்ளன.

2016 இற்கான பல் வைத்திய சேவைத் தரவு சேகரித்தலுக்கு புதிய மாதிரிப்படிவம் இனங்காணப்பட்டு வழங்கப்பட்டது. அம்மாதாந்த அறிக்கைகள் மகரகம, பல் சுகாதார நிறுவனத்தினூடாக பிரிவுக்கு வழங்கப்பட்டது.

2015 இறுதியளவில் 2011 இற்கான தரவுப் பகுப்பாய்வு பூர்த்தி செய்யப்பட்டதுடன் அதற்கு முந்திய, பிந்திய வருடங்களின் தரவுகளைப் பகுத்து இறுதித் தரவுக் கோப்பு தயாரித்தல் இவ்வருடம் மேற்கொள்ளப்பட்டது. எனினும் 2014 இற்கான தரவுப்பகுப்பாய்விற்கு முன்னுரிமை வழங்கல், சிறுவர் செயற்பாட்டு அளவீடு மற்றும் சுகாதார அளவீட்டுக்கு அலுவலர்களை விடுவித்தல் என்பன காரணமாக 2011 இற்கான இறுதித் தரவுக்கோப்பு தயாரித்தல் தாமதமடைந்தது.

2014 இற்குரிய தரவுப்பகுப்பாய்வு பூர்த்தி செய்யப்பட்டதுடன் 2013 இற்கான தரவுக் கோப்புகளின் செம்மை சரிபார்க்கப்பட்டு வருகிறது. அதற்கு இணையாக தரவுகளைக் கணனிப்படுத்துவதற்கு வினைத்திறன் மிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதுடன் இவ்வருடம் 2014,2015 வருடங்களின் தரவுகள் கணனிப்படுத்தல் பூர்த்தி செய்யப்பட்டு 2016 40% மான தரவுகள் கணனிப்படுத்தப்பட்டுள்ளது. 2015, 2016 தரவுகள் தொடர்பில் வைத்தியப்

புள்ளிவிபரங்களைக் கணனிப்படுத்தல் பொருட்டு புதிய நிகழ்ச்சித்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டதுடன், 2016 இற்கான தரவு கணனிப்படுத்தல் பூர்த்தியடைந்துள்ளது. தற்போது 2016 இற்கான தரவுகள் உள்ளடக்கப்பட்டு வருகிறது.

2010 இல் இனங்காணப்பட்ட eIMMR வேலைத்திட்டத்தை 2012 இல் வைத்தியசாலைகளில் நிறுவ ஆரம்பிக்கப்பட்டதுடன், 2013 இல் 98 வைத்தியசாலைகள் வெற்றிகரமாக நிறுவப்பட்டன. அத்துடன் 2014 இல் புதிதாக 75 வைத்தியசாலைகளும் 2015 இல் புதிதாக 127 வைத்தியசாலைகளும் 2016 இல் புதிதாக 124 வைத்தியசாலைகளும் உள்ளடக்கப்பட்டதுடன், தற்போது இவ்வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் 424 வைத்தியசாலைகளில் செயற்படுத்தப்பட்டுள்ளது.

2016 இன் பொருட்டு சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலக மட்டத்தில் சனத்தொகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இதற்காக குடிசன, வீட்டு வசதிகள் தொகைமதிப்பு - 2012 இன் இறுதி அறிக்கையிலுள்ள கிராம உத்தியோக பிரிவுச் சனத்தொகையை அடிப்படையாக கொள்ளப்பட்டது. 2017 சனத்தொகை மதிப்பீடு தயாரிக்கத் தேவையான சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனை இற்றைப்படுத்தலும் பூர்த்தி செய்யப்பட்டது.

2016 இல் 26 பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகங்களில் eIMMR முறை சம்பந்தமாக பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டதுடன் களனிப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களுக்கு வைத்திய புள்ளிவிபரங்கள் பற்றித் தெ ளிவுபடுத்தும் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

### 2.3.7 வாழ்நிலைப் புள்ளிவிபரங்கள்

பதிவாளர் நாயகம், திணைக்களத்தின் புள்ளிவிபரப் பிரிவினூடாக இலங்கையில் வருடாந்தம் பதிவு செய்யப்படும் பிறப்பு, விவாகம், இறப்பு புள்ளிவிபரங்கள் மற்றும் இறப்புக்குரிய காரணங்கள் போன்ற தரவுகள் சேகரிக்கப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிடப்படுகிறது. 2011, 2012, 2013 வருடங்களுக்கான மரணங்களுக்கான காரணங்களுக்குரிய இற்றைப்படுத்தப்பட்ட தரவுகள் வெளியிடப்பட்டதுடன் 2014 க்குரிய தரவுகள் கணனிப்படுத்தல் பூர்த்தியடைந்துள்ளது. அத்துடன் 2014 இற்கான இறுதித் தரவுகள் வெளியிடும் பொருட்டு தயாரிக்கப்பட்டு வருகிறது. 2015, 2016 இற்குரிய மக்களியல் தரவுகள் தற்போது மாவட்ட அலுவலகங்களில் இருந்து பெறப்பட்டு வருகிறது.

அத்துடன் நட்டாண்டு சனத்தொகை மதிப்பீடும்இப்பிரிவினூடாக மேற்றகொள்ளப்பட்டதுடன் 2016 இற்குரிய வயதுப் பிரிவு மற்றும் மாவட்ட ரீதியாக நட்டாண்டு சனத்தொகை தயாரிக்கப்பட்டு தரவுப் பாவணையாளர்களுக்கு வழங்கப்பட்டது. 2015 இற்கான வாழ்நிலைப் புள்ளிவிபரச் சுட்டெண் (உதா: செப்பமற்ற பிறப்பு வீதம், செப்பமற்ற இறப்பு வீதம், சனத்தொகை வளர்ச்சி வீதம் போன்றன) தயாரித்தல் முடிவடைந்துள்ளது.

### 2.3.8 சுங்கப்புள்ளிவிபரங்கள்

இலங்கை சுங்கத்தின் தானியங்கு தரவு வகைபடுத்தற் பிரிவிலிருந்து கணனிப்படுத்தப்பட்ட ஏற்றுமதி/இறக்குமதி சம்பந்தமான தரவுகளை நாளாந்தம் பெற்றுக்கொள்ளல்,வெளிநாட்டு வர்த்தகப் புள்ளிவிபரங்களுக்குரிய தகவல்களை கணித்தல், இறக்குமதி/ஏற்றுமதி , மீள் ஏற்றுமதிக்கான தரவுகளை வேறாகக் கோவைப்படுத்தல், பிழையான தரவுகளை வழுவற்றதாக்கி மாதாந்த வழுவற்ற கணனிப்படுத்தப்பட்ட தரவுக்கோப்பைத் தயாரித்தல், புள்ளிவிபரத் தரவு விற்பனைப் பிரிவின் வினைத்திறனைப் பேணுதல் என்பன இப்பிரிவின் முக்கிய பொறுப்புகளாகும். வெளிநாட்டு வர்த்தகப் புள்ளிவிபரங்கள் மாதாந்த

தயாரிக்கப்பட்டு அம்மாதம் முடிவடைந்து 15 நாட்களினுள் இலங்கை மத்தியவங்கி, பொதுத் தினசேரி, பல்வேறு அமைச்சுகள், திணைக்களங்கள், உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் ஆகியோருக்கு விநியோகிக்கப்பட்டது.

### 2.3.9 கடற்றொழில் புள்ளிவிபரங்கள்

மீன்பிடி மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சிலுள்ள புள்ளிவிபர களையின் மூலம் கரையோர, ஆழ்கடலில் பிடிக்கப்பட்ட மீன்களின் அளவு, மீனிற்கான மொத்த சில்லறை விலைகள், மீன் மற்றும் மீன் சார்ந்த உறபத்தி பொருட்களின் இறக்குமதி, ஏற்றுமதி தொடர்பிலான தகவல்கள் சேகரிக்கப்படுகின்றது.

மீன்பிடிப் புள்ளிவிபரம் 2016 வெளியீடு தயாரிக்கப்பட்டது.

பாரிய கடல்சார் மீன்பிடித் தரவு சேகரித்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட தரவுகள் கணனிமயப்படுத்தப்படுகின்றன.

ஐஸ் உற்பத்தி மற்றும் குளிர் அறைகள் தொடர்பான அளவீடு 2016 இற்கான 75% மான மாதிரிச் சட்டங்கள் இற்றைப்படுத்தப்பட்டன. மேலும் படகு கட்டுமான அளவீட்டுக்கான மாதிரிச்சட்டம் இற்றைப்படுத்தப்பட்டதுடன் இது தொடர்பிலான அறிக்கை தயாரித்து வெளியிட தேவையான அடிப்படைத் தரவுகள் சேகரிக்கப்பட்டது.

## 3 நிர்வாகம்

### 3.1 பிரிவுகள், கிளை அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள்

### 3.1.1 பிரிவுகளும் அலகுகளும்

2016 ஆம் ஆண்டு பின்வரும் 15 தொழில்நுட்ப, சேவைகள் பிரிவுகளுடன் மேலதிக பிரிவு ஒன்றும் செயற்பாட்டில் இருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவையும் கொண்டிருந்தது.

பிரிவு 1 - குடிசனத் தொகைமதிப்பும் மக்களியலும்
பிரிவு 2 - கைத்தொழில், நிர்மாணம், வர்த்தக, சேவைகள்
பிரிவு 3 - விவசாயமும் சுற்றாடலும்
பிரிவு 4 - தேசிய கணக்குகள்
பிரிவு 5 - வெளியீடுகள்
பிரிவு 6 - நூலக ஆவணமாக்கல்
பிரிவு 7 - தகவற் தொடர்பாடற் தொழில்நுட்பவியல்
பிரிவு 8 - நிர்வாகமும் கணக்கியலும்
பிரிவு 9 - மாதிரி அளவீடுகள்
பிரிவு10 - அச்சிடல்
பிரிவு11 - வெளிக்கள முகாமைத்துவம்
பிரிவு12 - புள்ளிவிபரப் பயிற்சி
பிரிவு15 - ஆராய்ச்சியும் விஷேட கற்கைகளும்
பிரிவு16 - விலைகளும் கூலிகளும்
பிரிவு18 - வரைபடங்கள்
தரவுப் பரம்பற்பிரிவு
உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

### 3.1.2 அமைச்சுக்கள், திணைக்களங்களில் உள்ள கிளை அலுவலகங்கள்

இத்திணைக்களம் பல்வேறு முக்கிய அமைச்சுக்கள், திணைக்களங்களில் 40 கிளை அலுவலகங்களைக் கொண்டுள்ளது. இக்கிளைகள் ஒவ்வொன்றும் பிரதிப்பணிப்பாளர், சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர், புள்ளிவிபரவியலாளர் அல்லது புள்ளிவிபர உத்தியோகத்தர் அல்லது புள்ளிவிபர உதவியாளர் ஒருவரின் பொறுப்பில் உள்ளது.

### 3.1.3 மாவட்ட அலுவலகங்கள்

மாவட்டச் செயலகங்களிலுள்ள 25 மாவட்ட அலுவலகங்களையும் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் "எச்" பிரதேசத்தில் தம்புத்தேகவில் ஒருஅலுவலகத்தையும் இத்திணைக்களம் கொண்டுள்ளது. இவைகள் ஒவ்வொன்றும் பிரதிப்பணிப்பாளர், சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர், அல்லது புள்ளிவிபரவியலாளர் பொறுப்பாக உள்ளதுடன் புள்ளிவிபர உத்தியோகத்தர்கள் மற்றும் புள்ளிவிபர உதவியாளர்கள் அவரின் கீழ் இணைக்கப்பட்டுள்ளார். ஒவ்வொரு மாவட்டத்திலும் திணைக்களத்தால் நடத்தப்படும் தொகைமதிப்புகள், அளவீடுகளுக்குரிய தரவு சேகரித்தல் இவ்வலுவலகத்தால் மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன் மாவட்டத்தினுள் புள்ளிவிபர இணைப்பு நடவடிக்கைகளும் இம்மாவட்ட அலுவலகத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

### 3.1.4 மாகாணசபைகளில் உள்ள புள்ளிவிபர ஆளணியினர்

தொழில்சார் புள்ளிவிபர ஆளணியினரை அமர்த்துவதன் மூலம் மாகாணசபைகளிற்கு புள்ளிவிபரச் சேவைகளை மாகாணசபைகளுக்கு வழங்குதல் தொடரப்பட்டது. தற்காலிகமாகப் புள்ளிவிபர ஆளணியினரை மாகாணசபைகளுக்கு இணைப்பதற்கான ஒழுங்குகள் மாகாணசபைகளுடன் செய்யப்பட்டன. இவ்வொழுங்குகள் புள்ளிவிபரக் கூட்டிணைப்பையும் புள்ளிவிபரத்தரத்தை பராமரித்தலையும் ஆளணியினரை பகிர்ந்தளித்தலையும் உறுதிசெய்தன.

## 3.2 ஆளணியினர்

| | பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | 2016.12.31ம் திகதியின் போதுள்ள பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | பணிப்பாளர் நாயகம் | 1 | 1 | 0 |
| 2 | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (புள்ளிவிபரம்) | 3 | 1 | 2 |
| 3 | மேலதிகப் பணிப்பாளர் நாயகம்(தகவல்தொழில்நுட்பம்) | 1 | 0 | 1 |
| 4 | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) | 1 | 1 | 0 |
| 5 | பணிப்பாளர் (புள்ளிவிபரம்) | 11 | 4 | 7 |
| 6 | பணிப்பாளர் (நிர்வாகம்) | 1 | 0 | 1 |
| 7 | பணிப்பாளர் (ICT) | 2 | 0 | 2 |
| 8 | பிரதம கணக்காளர் | 1 | 1 | 0 |
| 9 | பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் | 1 | 1 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | பிரதிப் பணிப்பாளர் (புள்ளிவிபரம்) | 34 | 0 | 34 |
| 11 | பிரதிப் பணிப்பாளர் (ICT) | 6 | 3 | 3 |
| 12 | பிரதி/ உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) | 1 | 1 | 0 |
| 13 | உதவிப் பணிப்பாளர் (ICT) | 14 | 6 | 8 |
| 14 | கணக்காளர் [1] | 2 | 2 | 0 |
| 15 | உள்ளகக் கணக்காய்வாளர் [1] | 1 | 0 | 1 |
| 16 | சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர் [3] | 200 | 30 | 0 |
| 17 | புள்ளிவிபரவியலாளர் [1,7] | | 114 | 56 |
| 18 | அச்சக முகாமையாளர் [1] | 1 | 0 | 1 |
| 19 | நிர்வாக உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| 20 | புள்ளிவிபரப் படவரைஞர் | 1 | 0 | 1 |
| 21 | நூலகவியலாளர் | 3 | 3 | 0 |
| 22 | மொழிபெயர்ப்பாளர் | 3 | 2 | 1 |
| 23 | தகவற் தொடர்பாடற் தொழில்நுட்ப உத்தியோகத்தர் - SLICTS | 30 | 12 | 18 |
| 24 | புள்ளிவிபரஉத்தியோகத்தர் | 494 | 336 | 158 |
| 25 | புள்ளிவிபர உதவியாளர் | 202 | 189 | 0 |
| 26 | அபிவிருத்தி உத்தியோகத்தர் [2] | 64 | 57 | 7 |
| 27 | வரவுசெலவுத்திட்ட உதவியாளர் [2] | 1 | 1 | 0 |
| 28 | வரைபடவியலாளர் | 1 | 1 | 0 |
| 29 | தகவற் தொடர்பாடற் தொழிநுட்ப உதவியாளர் - SLICTS | 250 | 227 | 23 |
| 30 | அச்சிடலின் பின்பான அச்சிடுனர் | 5 | 0 | 5 |
| 31 | பொறிவலர் (அச்சிடல்) | 2 | 0 | 2 |
| 32 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 1 | 0 | 1 |
| 33 | அச்சக முன் அச்சிடுனர் | 2 | 0 | 2 |
| 34 | Offset லிதோ இயந்திர இயக்குனர் | 1 | 0 | 1 |
| 35 | முறைக் கட்டுக்காப்பாளர் [3] | 6 | 2 | 0 |
| 36 | சிரேஸ்ட முறை இயக்குனர் [3] | 4 | 3 | 0 |
| 37 | போர்மன் (அச்சிடல்) | 1 | 0 | 1 |
| 38 | அரச முகாமை உதவியாளர் | 170 | 112 | 58 |
| 39 | தரவுப்பதிவு இயக்குனர் | 8 | 5 | 3 |

| | | | | |
|---|---|---|---|---|
| 40 | தரவுப்பதிவு இயக்குனர்/குறியீட்டு எழுதுனர் | 42 | 36 | 6 |
| 41 | சிங்கள மொழிமூல எழுதுனர் | 10 | 9 | 1 |
| 42 | தமிழ் மொழிமூல எழுதுனர் | 20 | 17 | 3 |
| 43 | புகைப்படக் கருவி இயக்குனர் [3] | 1 | 1 | 0 |
| 44 | லிதோ இயந்திர இயக்குனர் [5] | 2 | 2 | 0 |
| 45 | தகடு ஆக்குனர் [4] | 1 | 1 | 0 |
| 46 | பொறி உதவியாளர் [3] | 2 | 2 | 0 |
| 47 | அச்சுக் கோர்ப்பவர் | 1 | 1 | 0 |
| 48 | சாரதிகள் | 55 | 50 | 5 |
| 49 | குளிரூட்டி இயந்திர இயக்குனர் [3] | 1 | 1 | 0 |
| 50 | அச்சிடல் இயந்திர உதவியாளர் | 1 | 0 | 1 |
| 51 | அலுவலக உதவியாளர் சேவை (நிரந்தரம்) | 107 | 99 | 8 |
| 52 | அலுவலக உதவியாளர் சேவை (திணைக்கள) | 10 | 9 | 1 |
| | **மொத்தம்** | **1783** | **1343** | **422** |
| | பட்டதாரி பயிலுனர் | 0 | 4 | 0 |
| | சாரதி(அமையம்) | 3 | 2 | 1 |
| | அலுவலக உதவியாளர் சேவை(அமையம்) | 3 | 1 | 2 |
| | **மொத்தம்** | **1789** | **1350** | **425** |

1. இப்பதவிகள் உரிய சேவைப்பதவியின் / III அல்லது II ம் வகுப்புப் பதவிகளாகும். மட்டுப்படுத்தப்படாத பணியாளர்கள் பதவியுயர்வு மூலம் வகுப்பு II அல்லது III இற்கு செல்லாது இப்பதவியிலேயே இருக்கலாம். அங்கீகரிக்கப்பட்ட பதவியின் கீழ் தரம் III அலுவலர் தரம் II அலுவலரின் பதிற் கடமை அலுவலராக நியமித்தலாகாது.

2. இலங்கை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்த்தலுக்கு உட்படல்.

3. பதவி வகிப்பவர்களுக்கு தனிப்பட்ட வகையிலும் பின்னர் இரத்துச் செய்யப்பட்டலுக்கும் உரிய.

4. பதவி வகிப்பவர்களுக்கு தனிப்பட்ட வகையிலும் பின்னர் இரத்துச் செய்யப்படலுக்கும் உரியதுடன் இப்பதவி இரத்துச் செய்யப்பட்ட பின் " முன் அச்சகத் திட்டவியலாளர் " எனும் பெயரும் MT 1-2006A சம்பள அளவுத் திட்டமும் கொண்ட 3 புதிய பதவிகள் பரிந்துரைக்கப்பட்டது.

5. பதவி வகிப்பவருக்கு தனிப்பட்ட வகையிலும் பின் இரத்துச் செய்தலுக்கு பரிந்துரைக்கப்பட்டதுடன் இப்பதவி இரத்துச் செய்யப்பட்ட பின் " லிதோ இயந்திர இயக்குனர் " எனும் பதவிப் பெயரும் MT 1-2006A சம்பள அளவுத்திட்டமும் கொண்ட 3 பதவிகள் பரிந்துரைக்கப்பட்டது.

6. பதவி வகிப்பவருக்கு தனிப்பட்ட வகையிலும் பின் இரத்துச் செய்தலுக்கும் பரிந்துரைக்கப்பட்டதுடன் இப்பதவி இரத்துச் செய்யப்பட்ட பின் " கணனி அச்சுக் கோர்ப்பவர் / வடிவமைப்பாளர் " எனும் பதவிப் பெயரும் MT 1-2006A சம்பள அளவுத்திட்டமும் கொண்ட 2 புதிய பதவிகள் பரிந்துரைக்கப்பட்டது.

7. அங்கீகரிக்கப்பட்ட 200 புள்ளிவிபரவியலாளர் பதவிகளில் 37 சிரேஸ்ட புள்ளிவிபரவியலாளர் பதவிகளும் உள்ளடக்கப்படுவதால் ஆட்சேர்ப்பு செய்தலின் போது இரு பதவிகளும் இணைந்த 200 பதவியணியைக் கருத்திற் கொள்ளல் வேண்டும்.

## 3.3. மாநாடுகள், கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகளில் பங்குபற்றியோர் - 2016

| இல. | பெயர் | நிகழ்ச்சித்திட்டம் |
|---|---|---|
| 1 | திருமதி.கே.எம்.டீ.எஸ்.டீ.கருணாரத்ன<br>பிரதிப் பணிப்பாளர் | SNA பயிற்சி<br>ஜப்பான், 12 - 18 ஜனவரி 2016 |
| 2 | திரு.எம்.எல.ஏ.பி.குணசேகர<br>சிரேஷ்ட புள்ளிவிபரவியளாளர் | மக்களியல் மற்றும் சனத்தொகை எதிர்வுகூறல் சம்பந்தமான சர்வதேச பயிற்சிப்பட்டறை.<br>பிலிப்பைன்ஸ், 11 - 22 ஜனவரி 2016 |
| 3 | திருமதி.ஓ.ஆர்.விஜேகுணசிங்க<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | மக்களியல் மற்றும் சனத்தொகை எதிர்வுகூறல் சம்பந்தமான சர்வதேச பயிற்சிப்பட்டறை.<br>பிலிப்பைன்ஸ், 11 - 22 ஜனவரி 2016 |
| 4 | திரு.வி.டீ.அனுருத்த<br>புள்ளிவிபர உதவியாளர் | மக்களியல் மற்றும் சனத்தொகை எதிர்வுகூறல் சம்பந்தமான சர்வதேச பயிற்சிப்பட்டறை.<br>பிலிப்பைன்ஸ், 11 - 22 ஜனவரி 2016 |
| 5 | திரு.பி.ஏ.யூ.வர்ணசிறி<br>புள்ளிவிபரவியளாளர் | சிறந்த பொருளாதாரத் தீர்மானம் எடுத்தலுக்கான ஒருங்கிணைந்த நுண்பொருளியற் புள்ளிவிபரம் பற்றிய கொள்ளளவைக் கட்டியெழுப்பும் கருத்தரங்கு<br>கம்போடியா, 21 - 22 ஜனவரி 2016 |
| 6 | திரு.பி.டீ.டீ.பீறிஸ்<br>உதவி பணிப்பாளர் (தொழில்நுட்பம்) | SAARCSTAT இணையப்பக்கத்தை இற்றைப்படுத்தல் பற்றிய சார்க் - ஆசிய அபிவிருத்தி வங்கியின் முதலாவது பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.<br>பாகிஸ்தான், 15 - 16 பெப்ரவரி 2016 |
| 7 | திரு.ஜீ.டீ.பி.டி.குணதிலக<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | SAARCSTAT இணையப்பக்கத்தை இற்றைப்படுத்தல் பற்றிய சார்க் - ஆசிய அபிவிருத்தி வங்கியின் முதலாவது பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.<br>பாகிஸ்தான், 15 - 16 பெப்ரவரி 2016 |
| 8 | திரு.கே.ஆர்.யூ.எஸ்.பண்டார<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | பசுமைப் பொருளாதாரக் குறிகாட்இகள் சம்பந்தமான அபிவிருத்தி வேலைத்திட்டம்.<br>மொங்கோலியா, 29 மார்ச் - 01 ஏப்ரல் 2016 |
| 9 | திரு.ஆர்.எச்.எஸ்.அபேநாயக்க<br>பணிப்பாளர் | உத்தியோகப் புள்ளிவிபரப் பயிற்சி சம்பந்தமான பிராந்தியப் பயிற்சிப்பட்டறை.<br>ஜப்பான், 29 பெப்ரவரி - 03 மார்ச் 2016 |
| 10 | திருமதி.டபிள்யூ.ஏ.சீ.விஜேபண்டார<br>புள்ளிவிபரவியளாளர் | கொள்கை அடிப்படை ஆதாரத்திற்கான தரவுப் பகுப்பாய்வு நிகழ்ச்சித்திட்டம்.<br>இத்தாலி, 14 - 18 மார்ச் 2016 |

| | | |
|---|---|---|
| 11 | டாக்டர்.ஏ.ஜே.சதரசிங்க<br>பணிப்பாளர் நாயகம் | ஆசிய, பசுபிக் பொருளியற் புள்ளிவிபர வாரம்.<br>தாய்லாந்து, 02 - 04 மே 2016 |
| 12 | திருமதி.டீ.என்.முனசிங்க<br>புள்ளிவிபரவியளாளர் | ஆசிய, பசுபிக் பொருளியற் புள்ளிவிபர வாரம்.<br>தாய்லாந்து, 02 - 04 மே 2016 |
| 13 | திருமதி.வை.பீ.ராஜபக்ஷ<br>புள்ளிவிபரவியளாளர் | சிறிய அளவிளான கடற்தொழில், தரவு சேகரித்தலுக்கான பிராந்தியப் பயிற்சிப்பட்டறை.<br>இந்தோனேஷியா, 07 -08 மார்ச் 2016 |
| 14 | திருமதி.யூ.எல்கே.பெரேரா<br>புள்ளிவிபரவியளாளர் | சிறிய அளவிளான கடற்தொழில், தரவு சேகரித்தலுக்கான பிராந்தியப் பயிற்சிப்பட்டறை.<br>இந்தோனேஷியா, 07 -08 மார்ச் 2016 |
| 15 | திரு.எம்.டீ.சுனில் சேனானாயக்க<br>பிரதிப் பணிப்பாளர் | சக்திப் புள்ளிவிபரம் பற்றிய சர்வதேசப் பயிற்சிப்பட்டறை.<br>சீனா, 23 - 25 மே 2016 |
| 16 | திருமதி.ஐ.ஏ.எம்.பெர்னாண்டோ<br>பணிப்பாளர் | முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.<br>மலேஷியா, 18 - 22 ஏப்ரல் 2016 |
| 17 | திரு.டீ.ஜி.எஸ்.ஜி.முனசிங்க<br>மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | மலேஷியா திறந்த பல்லைக்கழகத்தில் கொள்கை திட்டமிடல், அமுலாக்கலுக்கான சர்வதேச நிகழ்ச்சித்திட்டம்.<br>மலேஷியா, 02 - 09 மே 2016 |
| 18 | திருமதி.டீ.டீ.பஸ்னாயக்க<br>புள்ளிவிபரவியளாளர் | சிறுவர்கள் உரிமை, இழப்பு பற்றிய இரண்டாவது தொழில்நுட்பச் செயலமர்வு.<br>தாய்லாந்து, 27 -29 ஏப்ரல் 2016 |
| 19 | திரு.கே.எஸ்.ஜி.திலகரத்ன<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | சிறுவர்கள் உரிமை, இழப்பு பற்றிய இரண்டாவது தொழில்நுட்பச் செயலமர்வு.<br>தாய்லாந்து, 27 -29 ஏப்ரல் 2016 |
| 20 | திருமதி.ஐ.ஆர்.பண்டார,<br>மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 28வது குடிசன தொகைமதிப்பு மாநாடு<br>அமெரிக்கா, 07/09/2016 – 19/09/2016 |
| 21 | திரு.ஜே.எம்.எஸ்.யூ.பி.ஜயமஹ<br>புள்ளிவிபரவியளாளர் | தரவு சேகரித்தல், தேசிய அளவீட்டு முகாமைத்துவத்தை மேம்படுத்துதற்கான தகவற் தொழில்நுட்ப முறைமையை அமுல்படுத்துதல்.<br>பிலிப்பைன்ஸ், 07 - 08 ஜூலை 2016 |
| 22 | திரு.டீ.ஆர்.எம்.சீ.எம்.ரத்னாயக்க<br>புள்ளிவிபரவியளாளர் | தரவு சேகரித்தல், தேசிய அளவீட்டு முகாமைத்துவத்தை மேம்படுத்துதற்கான தகவற் தொழில்நுட்ப முறைமையை அமுல்படுத்துதல்.<br>பிலிப்பைன்ஸ், 07 - 08 ஜூலை 2016 |
| 23 | திரு.ஏ.எம்.பி.அபேசிங்க<br>புள்ளிவிபரவியளாளர் | விவசாயப் புள்ளிவிபரத் தொடர்பாடல் பற்றிய பிராந்தியப் பயிற்சிநெறி.<br>கொரியா, 27 ஜூன் - 01 ஜூலை 2016 |
| 24 | திருமதி.ஜீ.கே.டீ.எச்.மெனிக்கே<br>புள்ளிவிபரவியளாளர் | விவசாயப் புள்ளிவிபரத் தொடர்பாடல் பற்றிய பிராந்தியப் பயிற்சிநெறி.<br>கொரியா, 27 ஜூன் - 01 ஜூலை 2016 |
| 25 | திருமதி.ஈ.ஏ.ஏ.பி.எகொடவத்த<br>புள்ளிவிபரவியளாளர் | கட்டடக்கலை பற்றிய புளூம்பேர்க் பிராந்திய பயிற்சிப்பட்டறை.<br>தாய்லாந்து, 09 - 11 மே 2016 |

| | | |
|---|---|---|
| 26 | திரு.ஏ.ஜி.எஸ்.காரியவசம்<br>புள்ளிவிபரவியலாளர் | 2015 - 2016 ஆற்றல் ஒப்புமையைக் கொள்வனவு செய்தல் பற்றிய இரண்டாவது பிராந்தியப் பயிற்சிப்பட்டறை.<br>தாய்லாந்து, 06 - 10 ஜூன் 2016 |
| 27 | திருமதி.டீ.டீ.ஜீ.ஏ.செனவிரத்ன<br>பிரதிப் பணிப்பாளர் | நடத்தர வருமானம் பெறும் நாடுகள், நகரங்கள் பற்றிய கற்றல் நிகழ்வு.<br>சிங்கப்பூர், 12 ஜூலை 2016 |
| 28 | திரு.பி.ஏ.யூ.வர்ணசிறி<br>புள்ளிவிபரவியலாளர் | SUT பயிற்சி மற்றும் இற்றைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்.<br>தாய்லாந்து, 27 ஜூன் - 01 ஜூலை 2016 |
| 29 | திரு.ஜே.எஸ்.என்.பீ.தர்மவர்தன<br>சிரேஷ்ட புள்ளிவிபரவியலாளர் | உத்தியோகப்பூர்வப் புள்ளிவிபரம் பற்றிய மூன்றாவது சர்வதேச மாநாடு.<br>அயர்லாந்து, 30 ஆகஸ்ட் - 01 செப்டெம்பர். 2016 |
| 30 | திரு.பி.எம்.ஆர்.பெர்னான்டோ<br>பிரதிப் பணிப்பாளர் | CAPI முறை அடிப்படையிலான தரவு உள்ளீட்டு முறையைத் தாபித்தல்.<br>கொரியா, 25 - 31 ஜூலை 2016 |
| 31 | திரு.டபிள்யூ.எச்.பீ.டபிள்யூ.வீரசிறி<br>பிரதிப் பணிப்பாளர் | CAPI முறை அடிப்படையிலான தரவு உள்ளீட்டு முறையைத் தாபித்தல்.<br>கொரியா, 25 - 31 ஜூலை 2016 |
| 32 | திரு.கே.எம்.ஆர்.விக்ரமசிங்க<br>பிரதிப் பணிப்பாளர் | CAPI முறை அடிப்படையிலான தரவு உள்ளீட்டு முறையைத் தாபித்தல்.<br>கொரியா, 25 - 31 ஜூலை 2016 |
| 33 | திரு.கே.எல்.சி.எஸ்.வீரசூரிய<br>பிரதிப் பணிப்பாளர் | CAPI முறை அடிப்படையிலான தரவு உள்ளீட்டு முறையைத் தாபித்தல்.<br>கொரியா, 25 - 31 ஜூலை 2016 |
| 34 | திரு.பீ.டீ.டீ.பீரிஸ்<br>பிரதிப் பணிப்பாளர் | CAPI முறை அடிப்படையிலான தரவு உள்ளீட்டு முறையைத் தாபித்தல்.<br>கொரியா, 25 - 31 ஜூலை 2016 |
| 35 | திரு.ஈ.எம்.டீ.ஏக்கநாயக்க<br>உதவிப் பணிப்பாளர் | CAPI முறை அடிப்படையிலான தரவு உள்ளீட்டு முறையைத் தாபித்தல்.<br>கொரியா, 25 - 31 ஜூலை 2016 |
| 36 | திரு.எச்.டி.எஸ்.பொன்சேகா<br>புள்ளிவிபரவியலாளர் | CAPI முறை அடிப்படையிலான தரவு உள்ளீட்டு முறையைத் தாபித்தல்.<br>கொரியா, 25 - 31 ஜூலை 2016 |
| 37 | திரு.எஸ்.பூங்குன்றன்<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | CAPI முறை அடிப்படையிலான தரவு உள்ளீட்டு முறையைத் தாபித்தல்.<br>கொரியா, 25 - 31 ஜூலை 2016 |
| 38 | திரு.ஈ.எம்.சீ.டீ சேரம்<br>புள்ளிவிபரவியலாளர் | நிலையான அபிவிருத்தி 2020 நிகழ்ச்சி நிரலுக்கு ஆதரவாக மாற்றுதிறனாளிப் புள்ளிவிபரம் பற்றிய ஐ.நா.பிராந்தியக் கூட்டம்.<br>தாய்லாந்து, 26 - 28 ஜூலை 2016 |
| 39 | திரு.பி.எம்.பி.அனுரகுமார<br>பணிப்பாளர் | விவசாயத் தொகைமதிப்பு 2020 பற்றிய நிகழ்ச்சித் திட்டம்.<br>தாய்லாந்து, 19/09/2016 – 23/09/2016 |
| 40 | டாக்டர்.ஏ.ஜே.சதரசிங்க<br>பணிப்பாளர் நாயகம் | சார்க் புள்ளிவிபர நிறுவனத் தலைவர்களின் 8 ஆவது மாநாடு.<br>இந்தியா, 29-31 ஆகஸ்ட் 2016 |

| | | |
|---|---|---|
| 41 | திருமதி.யூ.மகேஸ்வரன்<br>பிரதிப் பணிப்பாளர் | சார்க் புள்ளிவிபர நிறுவனத் தலைவர்களின் 8 ஆவது மாநாடு.<br>இந்தியா, 29-31 ஆகஸ்ட் 2016 |
| 42 | திருமதி.கே.எம்.டி.எஸ்.டி.கருணாரத்ன<br>பிரதிப் பணிப்பாளர் | சார்க் புள்ளிவிபர நிறுவனத் தலைவர்களின் 8 ஆவது மாநாடு.<br>இந்தியா, 29-31 ஆகஸ்ட் 2016 |
| 43 | திரு.பீ.எல்.ஏ.ஏ.ஹேமந்த<br>புள்ளிவிபரவியளாளர் | ஆசிய - பசுபிக் பிராந்திய சர்வதேச தொழில் இடம்பெயர்வுப் புள்ளிவிபரத்தின் தரவு சேகரித்தலுக்கான இரண்டாவது பயிற்சிப்பட்டறை.<br>கொரியா, 10 - 12 ஒக்டோபர் 2016 |
| 44 | திருமதி.எஸ்.சீ.விக்ரமஆராச்சி<br>புள்ளிவிபர உதவியாளர் | ஆசிய - பசுபிக் பிராந்திய சர்வதேச தொழில் இடம்பெயர்வுப் புள்ளிவிபரத்தின் தரவு சேகரித்தலுக்கான இரண்டாவது பயிற்சிப்பட்டறை.<br>கொரியா, 10 - 12 ஒக்டோபர் 2016 |
| 45 | திரு.ஈ.எம்.எம்.கே.ஏக்கநாயக்க<br>புள்ளிவிபரவியளாளர் | மொத்த உள்நாட்டு உற்பத்தி மேம்படுத்தலுக்கான SNA 2008 சம்பந்தமான பிராந்தியப் பயிற்சிநெறி.<br>கொரியா, 22-30 ஆகஸ்ட் 2016 |
| 46 | திரு.டி.ஜி.எஸ்.ஜி.முனசிங்க<br>மேலதிக பணிப்பாளர் நாயகம் | நிலையான அபிவிருத்தி 2030 நிகழ்ச்சி நிரல் அமுல்படுத்தலுக்கான புள்ளிவிபரம் பற்றிய ஆசிய - பசுபிக் மாநாடு.<br>தாய்லாந்து, 24-26 ஆகஸ்ட் 2016 |
| 47 | திருமதி.கே.எம்.எம்.குமாரிஹாமி<br>மேலதிக பணிப்பாளர் நாயகம் | முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.<br>மலேஷியா, 20-26 செப்டெம்பர் 2016 |
| 48 | டாக்டர்.ஏ.ஜே.சதரசிங்க<br>பணிப்பாளர் நாயகம் | நிலையான அபிவிருத்தி இலக்குகளிற்கான புள்ளிவிபரம் சம்பந்தமான உப - பிராந்தியப் பயிற்சிப்பட்டறை.<br>இந்தியா, 05-09 செப்டெம்பர் 2016 |
| 49 | திருமதி.ஜே.கே.பீ.என்.ஜயகொடி<br>சிரேஷ்ட புள்ளிவிபரவியளாளர் | 2015-2016 இன் ஆற்றல் ஒப்புமைக் கொள்வனவு செய்தல் பற்றிய மூன்றாவது பிராந்தியப் பயிறசிப்பட்டறை.<br>பிலிப்பைன்ஸ், 12-16 செப்டெம்பர் 2016 |
| 50 | திரு.ஓ.எம்.பி.குமார<br>புள்ளிவிபர உதவியாளர் | விவசாயப் புள்ளிவிபரங்களுக்கான மாதிரியிடல் முறைகள் சம்பந்தமான மூன்றாவது பிராந்தியப் பயிற்சிநெறி.<br>இந்தோனேஷியா, 10 - 21 ஒக்டோபர் 2016 |
| 51 | திருமதி.கே.எம்.எஸ்.விமலரத்ன<br>புள்ளிவிபர உத்தியோகத்தர் | சமூகப் புள்ளிவிபரக் கொள்ளளவை வலுப்படுத்துவதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்.<br>கொரியா, 10 - 21 ஒக்டோபர் 2016 |
| 52 | திரு.எம்.ஜே.மார்கஸ் பெர்னாண்டோ<br>புள்ளிவிபரவியளாளர் | ஆசிய, ஐரோப்பிய நாடுகளுக்கான தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பு நிர்மாணம் சம்பந்தமான கருத்தரங்கு - 2016.<br>சீனா, 13 - 28 செப்டெம்பர் 2016 |
| 53 | திரு.டி.எல்.எதிரிசிங்க<br>புள்ளிவிபரவியளாளர் | ஆசிய, ஐரோப்பிய நாடுகளுக்கான தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பு நிர்மாணம் சம்பந்தமான கருத்தரங்கு - 2016.<br>சீனா, 13 - 28 செப்டெம்பர் 2016 |
| 54 | திருமதி.ஈ.ஏ.ஏ.பி.எகொடவத்த<br>புள்ளிவிபரவியளாளர் | நிலையான அபிவிருத்தி இலக்குகள் சம்பந்தமான பிராந்திய கொள்ளளவைக் கட்டியெழுப்புவத்றகான பயிற்சிப்பட்டறை.<br>தாய்லாந்து, 05 -07 ஒக்டோபர் 2016 |

| | | |
|---|---|---|
| 55 | திரு.எஸ்.எம்.எச்.என்.சமரகோன்<br>புள்ளிவிபரவியளாளர் | அனர்த்தப் புள்ளிவிபரம் சம்பந்தமான நிபுணர் குழுவின் நான்காவது கூட்டம்.<br>பிலிப்பைன்ஸ், 05 - 06 ஒக்டோபர் 2016 |
| 56 | திரு.டி.டீ.எம்.எஸ்.டி.பெரேரா<br>புள்ளிவிபரவியளாளர் | வியாபார புள்ளிவிபரப் பதிவேடு சம்பந்தமான பயிற்சிப்பட்டறையும் பொருளாதாரப் புள்ளிவிபரம் சம்பந்தமான பிராந்திய நிகழ்ச்சித்திட்டமும்<br>தாய்லாந்து, 30 நவம்பர். - 02 டிசம்பர். 2016 |
| 57 | செல்வி.எம்.ஜி.டபிள்யூ.ஐ.சியாமலி<br>புள்ளிவிபரவியளாளர் | வியாபார புள்ளிவிபரப் பதிவேடு சம்பந்தமான பயிற்சிப்பட்டறையும் பொருளாதாரப் புள்ளிவிபரம் சம்பந்தமான பிராந்திய நிகழ்ச்சித்திட்டமும்<br>தாய்லாந்து, 30 நவம்பர். - 02 டிசம்பர். 2016 |
| 58 | திருமதி.கே.ஏ.எஸ்.பி.கொடிகார<br>புள்ளிவிபரவியளாளர் | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான வியாபாரப் புள்ளிவிபரப் பதிவேடு பற்றிய பயிற்சிப்பட்டறை.<br>ஜப்பான், 07 - 11 நவம்பர் 2016 |
| 59 | திரு.எஸ்.தனபாலசிங்கம்<br>சிரேஷ்ட புள்ளிவிபரவியளாளர் | விவசாய உற்பத்திச் செலவுப் புள்ளிவிபரம் சம்பந்தமான பிராந்தியப் பயிற்சிநெறி.<br>கொரியா, 21 - 25 நவம்பர் 2016 |
| 60 | திரு.டி.எம்.கே.பி.கே.திஸானாயக்க<br>பிரதிப் பணிப்பாளர் | உணவுத் தானிய அளவீட்டு முறைமைகள் மற்றும் களஞ்சிய முகாமைத்துவம் சம்பந்தமான கருத்தரங்கு<br>இந்தியா, 09 - 11 நவம்பர் 2016 |
| 61 | திருமதி.சீ.டி.டீ சில்வா<br>பிரதிப் பணிப்பாளர் | நிலையான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் பாலின சமத்திவ மேம்பாடு சம்பந்தமான ஆசிய, பசுபிக் பிராந்தியக் கலந்துரையாடல்.<br>தாய்லாந்து, 15-17 நவம்பர் 2016 |
| 62 | டாக்டர்.ஏ.ஜே.சதரசிங்க<br>பணிப்பாளர் நாயகம் | நிலையான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலின் உத்தியோகப்ப;ர்வ புள்ளிவிபரம் சம்பந்தமான குழுவின் ஐந்தாவது செயலமர்வு.<br>தாய்லாந்து, 14-16 டிசம்பர் 2016 |
| 63 | திருமதி.வை.ஜி.ஆர்.ஐ.குலதிலக<br>சிரேஷ்ட புள்ளிவிபரவியளாளர் | விவசாய, கிராமியப் புள்ளிவிபரத்தைமேம்படுத்துவதற்கான ஆசிய, பசுபிக் பிராந்தியக் குழுவின் ஆறாவது கூட்டம்.<br>தாய்லாந்து, 15-17 நவம்பர் 2016 |
| 64 | திருமதி.வை.ஜி.ஆர்.ஐ.குலதிலக<br>சிரேஷ்ட புள்ளிவிபரவியளாளர் | ஆசிய, பசுபிக் பிராந்திய மதிப்பீட்டுமன்ற மாநாடு.<br>வியட்நாம், 21-25 நவம்பர் 2016 |
| 65 | திருமதி.டி.டி.ஜி.ஏ.செனவிரத்ன<br>பிரதிப் பணிப்பாளர் | ஆசிய, பசுபிக் புள்ளிவிபர நிறுவன ஆளுகைச் சபையின் 12வது செயலமர்வு.<br>தாய்லாந்து, 12-13 டிசம்பர் 2016 |

## 3.4 பதவியுயர்வுகள், புதிய நியமனங்கள், விடுவிப்புகள், பதவி விலகல்கள், பதவி வெறிதாக்கல்கள் மற்றும் இளைப்பாறல்கள்

### பதவியுயர்வுகள்

| | |
|---|---|
| மேலதிக பணிப்பாளர் நாயகம் (புள்ளிவிபரம்) | 01 |
| பணிப்பாளர் (புள்ளிவிபரம்) | 08 |

புதிய நியமனங்கள்

| | |
|---|---|
| புள்ளிவிபரவியளாளர் | 01 |
| அலுவலக உதவியாளர் சேவை | 15 |
| அலுவலக உதவியாளர் சேவை (தற்காலிக) | 02 |
| சாரதி (தற்காலிக) | 02 |

**விடுவிப்புகள்**

| | |
|---|---|
| புள்ளிவிபர உதவியாளர் | 01 |
| தரவுப் பதிவு இயக்குனர் | 01 |
| அலுவலக உதவியாளர் சேவை | 01 |

**பதவி வெறிதாக்கல்கள்**

| | |
|---|---|
| புள்ளிவிபர உதவியாளர் | 01 |
| தகவல் தொழில்நுட்ப சேவை உதவியாளர் | 01 |
| தரவுப் பதிவு இயக்குனர் | 01 |
| குறியீட்டு எழுதுவினைஞர் (சிங்கள மொழிமூலம்) | 01 |
| அலுவலக உதவியாளர் சேவை | 01 |
| அலுவலக உதவியாளர் சேவை (திணைக்களத்திற்குரிய) | 01 |

**இளைப்பாறல்கள்**

| | |
|---|---|
| பணிப்பாளர் (புள்ளிவிபரம்) | 02 |
| பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) | 01 |
| சிரேஸ்ட புள்ளிவிபரவியளாளர் | 05 |
| புள்ளிவிபரவியளாளர் | 04 |
| புள்ளிவிபர உத்தியோகத்தர் | 07 |
| அரச முகாமை உதவியாளர் | 03 |
| தகவல் தொழில்நுட்ப சேவை உதவியாளர் | 05 |
| சிரேஸ்ட அமைப்பு இயக்குனர் | 01 |
| புத்க்கம் கட்டுபவர் (அச்சகம்) | 01 |
| சாரதி | 01 |

**இடமாற்றம்**

| | |
|---|---|
| பிரதிப் பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) | 01 |
| தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 14 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 11 |
| அரச முகாமை உதவியாளர் | 45 |
| தகவல் தொழில்நுட்ப சேவை உதவியாளர் | 53 |
| சாரதி | 14 |
| அலுவலக உதவியாளர் சேவை | 24 |
| பட்டதாரி பயிற்சியாளர் | 04 |

**பதவி விலகல்**

| | |
|---|---|
| புள்ளிவிபர உத்தியோகத்தர் | 03 |
| தகவல் தொழில்நுட்ப சேவை உதவியாளர் | 01 |

**இறப்புக்கள்**

புள்ளிவிபர உத்தியோகத்தர் 01

## 3.5 உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள்

2016 இல் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் மேற்கொள்ளப்பட்ட நிறைவேற்றுகைகள் வருமாறு :

- 2016 இற்குரிய உள்ளகக் கணக்காய்வு வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டு தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சுச் செயலாளரிற்கும் கணக்காய்வாளர் அதிபதிக்கும் அனுப்பப்பட்டது.
- 2016 இற்கான ஆரம்ப அறிக்கை சமர்ப்பித்தல்.
- கீழே குறிப்பிட்ட மாவட்டப் புள்ளிவிபரப் பிரிவுகளின் போது நிர்வாகம் பரிசீலிக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது ; கம்பஹா, கேகாலை, இரத்தினபுரி, குருணாகல், களுத்தறை, காலி மற்றும் கல்வி அமைச்சின் மாவட்டப் புள்ளிவிபரப் பிரிவு.
- பயிற்சிப் பிரிவின் லீவுகள், பயிற்சி வேலைத்திட்டம் நடத்துதல் பற்றிப் பரிசீலித்தல்.
- திணைக்களத்தின் பிரதான களஞ்சியப் பிரிவு, மாதிரி அளவீட்டுப் பிரிவு, வரைபடப் பிரிவு, நூலகப் பிரிவு, தரவு பரம்பற் பிரிவு, தாபனப் பிரிவு, கைத்தொழில், நிர்மாண, வர்த்தக, சேவைகட் பிரிவு, கணக்குகள் பிரிவு ஆகிய பிரிவுகளில் அலுவலர்களின் லீவு பரிசீலிக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.
- வங்கி கணக்கிணக்க, நிதிப் புத்தக மாதிரி பரிசீலிக்கப்பட்டது.
- 2015 ஒக்ரோபர் மாத இன்வென்ரரி, நிதிப் புத்தகம், செலவுப் பதிவேடு என்பன பரீட்சீலிக்கப்பட்டது. 2016 இன் வங்கிக் கணக்கிணக்கம், காசுப் புத்தகம், செலவுப் பதிவேடு, பொது வைப்புக் கணக்கு, கணக்குத் தொகுப்பு மாதிரி என்பன பரிசீலிக்கப்பட்டது. 2015 இன் ஒதுக்கீட்டுக் கணக்கு பரிசீலிக்கப்பட்டது.
- பொருட்களை கணக்கெடுப்பு அறிக்கை, இன்வென்ற்றி புத்தகம் பரிசீலிக்கப்பட்டது. வெளியீட்டுப் பிரிவு, தேசிய கணக்குகள் பிரிவு, மாதிரி அளவீட்டுப் பிரிவு, வரைபடவியற் பிரிவு, விவசாயமும் சூழலும் பிரிவு, கைத்தொழில், நிர்மாண, சேவைகட் பிரிவு, பயிற்சிப் பிரிவு, தாபனப் பிரிவு ஆகியவற்றில் பொருட்பட்டி இடாப்பு, பொருட் கணக்கெடுப்பு அறிக்கை என்பன பரிசீலிக்கப்பட்டு குறை, மிகை என்பன பற்றி அறிக்கையிடப்பட்டது.
- 2016 இன் செயற்திட்டம் மற்றும் பெறுகைத் திட்டத்தின் நிதி, பௌதீக வளர்ச்சி பரிசீலிக்கப்பட்டு அறிக்கையிடப்பட்டது. 2015 இன் செயற்திட்டம், நிறைவேற்றுகை அறிக்கை பரிசீலிக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.
- 2015 இல் கொள்வனவு செய்யப்பட்ட ரயர்களுக்குரிய கோப்பு பரிசீலித்தல், வெளியிடல் மற்றும் லொக் புத்தகங்களில் பரிசீலிக்கப்பட்டது. வாகனத் திருத்த லொக் புத்தக உள்ளடக்கம் பரிசீலிக்கப்பட்டது. பக்ஸ் இயந்திரம், போட்டோப் பிரதி இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல், பராமரித்தல் பற்றி பரிசீலித்தல். பிரதான களஞ்சியக் கோப்பு, இருப்பு பரிசீலிக்கப்பட்டது. ஸ்கானிங் இயந்திரங்களின் செயற்பாடு மற்றும் சேவை உடன்படிக்கைக்கு அமைய சேவை உள்ளதா எனப் பரிசீலிக்கப்பட்டது.
- நூலகப் புத்தகங்கள் கொள்வனவு செய்தல், இன்வென்றறியில் உள்ளடக்கல் போன்ற விடயங்கள் பரிசீலிக்கப்பட்டது. புத்தக அளவீடு பற்றிய உள்ளகக் கணக்காய்வுப் பரிசீலனை என்பனவும் மேற்கொள்ளப்பட்டது.
- அரச அலுவலர்களின் முற்பண B கணக்கு பரிசீலிக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.
- விவசாயமும் சூழலும் பிரிவில் நடைபெறும் விவசாயத் தொகைமதிப்பு 2013/14 நிதி, பௌதீக வளர்ச்சி பரிசீலிக்கப்பட்டது.

- மக்களியல், சுகாதார அளவீடு மேற்கொள்ள வேண்டிய வீட்டுக்கூறுகளின் பட்டியல் கோப்பு மாதிரி பரிசீலிக்கப்பட்டது. கொடுப்பனவு வவுச்சர் மாதிரி, பயிற்சி வகுப்புச் செலவு வவுச்சர் என்பன பரிசீலிக்கப்பட்டது.
- வருடாந்தக் கைத்தொழில், வருடாந்த நிர்மாணக் கைத்தொழில் அளவீடுகளின் நிதி, பௌதீக வளர்ச்சிகள் பரிசீலிக்கப்பட்டு அறிக்கையிடப்பட்டது.
- வினைத்திறன் மிக்க மாவட்ட அலுவலகம் தெரிவு செய்தல், மாவட்ட புள்ளிவிபரக் கையடக்க நூல் தயாரித்தல் என்பன பரிசீலிக்கப்பட்டு அறிக்கையிடல்.
- தேயிலை,தெங்கு, இறப்பர் உற்பத்திச் செலவின அளவீட்டின் வளர்ச்சி பரிசீலிக்கப்பட்டு அறிக்கையிடப்பட்டது.
- தாபனப் பிரிவின் சுயவிபரக்கோவை மாதிரி பரிசீலிக்கப்பட்டது. சம்பள ஏற்றம், செயலாற்றுகை அறிக்கை சமர்ப்பித்தலின் மாதிரி பரிசீலித்தல். சம்பளப் பதிவேடு, பண்டிகைக் கொடுப்பனவு, சம்பளமற்ற விடுமுறை என்பவற்றின் மாதிரி பரிசீலிக்கப்பட்டு அறிக்கையிடல். திணைக்களத்துக்குரிய வாகனப் பாவணை, பராமரிப்பு பரிசீலித்தல்.
- 2016 இற்காக 04 உள்ளகக் கணக்காய்வு முகாமைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

## 4. நிதி அறிக்கை 2016

2016ம் ஆண்டுக்கான மொத்த மதிப்பிடப்பட்ட செலவினம், அதன் ஏற்புடைய வரையறையின் கீழ் ரூபா 1,134,742,040 (1,134.74 மில்லியன்) ஆகும். மீண்டுவரும் செலவினம் ரூபா 857,980,000 (857.98 மில்லியன்) ஆகவும் மூலதனச் செலவினம் ரூபா 276,762,040 (276.76 மில்லியன்) ஆகவும் இருந்தது. "மீண்டுவரும் செலவினம் 2016" அட்டவணையின்படி உண்மையான மீண்டுவரும் செலவினம் ரூபா 838,283,719 (838.28 மில்லியன்) ஆக இருந்தது. "மூலதனச் செலவினம் 2016" இன்படி செலவழிக்கப்பட்ட உண்மையான மூலதனச் செலவினம் ரூபா 249,630,348 (249.63 மில்லியன்) ஆக இருந்தது.

மீண்டுவரும் செலவினம்:

மதிப்பிடப்பட்ட செலவினத்துக்கும் உண்மையான செலவினத்துக்கும் இடையிலான வேறுபாடுகள் பின்வரும் வகையின் கீழ் இனங்காணப்பட்டு அதற்கான காரணங்களும் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றன.

- இவ்வருடத்தில் வாடகை வாகனங்கள் தேவைப்படவில்லை
- கொடுக்கப்படவிருந்த வவுச்சரிற்கு கட்டுநிதி போதாமை.

மூலதனச் செலவினத்தின் கீழ் மதிப்பிடப்பட்ட செலவினத்துக்கும் உண்மைச் செலவினத்துக்கும் இடைப்பட்ட வேறுபாடுகள்

- எதிர்பார்த்தவாறு இயந்திரங்களில் பெரிய திருத்தங்கள் தேவைப்படாமை.
- மதிப்பிடப்பட்ட வேலைகளுக்கு போதியளவு ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்படாமை.
- கொடுக்கப்படவிருந்த வவுச்சர்களிற்கு போதியளவு கட்டுநிதி கிடைக்காமை.
- வெளிநாட்டு உதவியின் கீழ் கிடைத்திருந்த மொத்த நிதிக்கும் ஏற்பாடு ஒதுக்கப்படல்.

| | |
|---|---|
| தலைப்பு | 252 தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் |
| நிகழ்ச்சித் திட்டம் | 01 இயக்கச் செயற்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் |
| கருத்திட்டம் | 01 நிர்வாக, புள்ளிவிபரச் சேவை |

**மீண்டுவரும் செலவினம் - 2016**

| கருத்திட்டம் | வாக்குப் பணம் | 2016 மதிப்பிடப்பட்டது (ரூபா) | 2016 உண்மைச் செலவினம் (ரூபா) |
|---|---|---|---|
| 1 | 1 தனிநபர் வேதனாதிகள் | 694,000,000.00 | 689,846,816.00 |
| | 2 ஏனைய மீண்டுவரும் செலவினம் | 163,980,000.00 | 148,436,903.00 |
| | **மொத்தம்** | **857,980,000.00** | **838,283,719.00** |

**மூலதனச் செலவினம்** - 2016

| கருத்திட்டம் | வாக்குப் பணம் | 2016 மதிப்பிடப்பட்டது (ரூபா) | 2016 உண்மைச் செலவினம் (ரூபா) |
|---|---|---|---|
| 1 | மூலதனச்செலவினம்<br>1. சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும் | 6,500,000.00 | 5,356,182.00 |
| | 2. மூலதனச் சொத்துக்களை உடமையாக்குதல் | 207,553,225.00 | 186,995,843.00 |
| | ஏனைய மூலதனச் செலவினம் | 62,708,815.00 | 57,278,323.00 |
| | **மொத்தம்** | **276,762,040.00** | **249,630,348.00** |

**அரசாங்க சேவைகளின் முற்பணக் கணக்கு**(ஏ. பீ. ஏ. ஜீ. எஸ்.) **2520**011 - **2016**

| | அங்கீகரிக்கப்பட்ட எல்லை (ரூபா) | உண்மை எல்லை (ரூபா) |
|---|---|---|
| ஆகக் கூடிய வரவு எல்லை | 40,000,000.00 | 35,557,373.00 |
| ஆகக் குறைந்த பற்று எல்லை | 28,000,000.00 | 36,288,023.19 |
| ஆகக் கூடிய வரவு மீதி எல்லை | 220,000,000.00 | 141,333,974.41 |